பக்கங்கள்:12 விலை : 30/-

காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2052 ஐப்பசி 29 திங்கட்கிழமை 15.11.2021 கதிர் 10

### இனிது ரகசியம் அல்ல!

வடக்கில் பிரதேச சபை ஒன்றில் பெரும்பான்மைப் பலத்துடன் அதிகாரத்தை வைத்திருக்கும் கட்சி ஒன்று 'சொந்தச் செலவில் சூனியம் வைக்க' தயாராவதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

அந்தப் பிரதேச சபைக்குத் தான் தெரிவு செய்த பக்கம்02 »

# சுமந்திரன் குழுவுடன் அமெ. GTF அமைப்புக்கும் அழைப்பு

TNA Tamil National Alliance தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

Global Tamil Forum உலகத் தமிழர் பேரவை

## இன்று ஐந்து சந்திப்பு நிகழ்வுகள்

வொஷிங்டன், நவம்பர் 15

எம்.ஏ.சுமந்திரன் எம்.பி. உட்பட மூன்று சட்ட நிபுணர்கள் அடங்கிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகள் குழுவை அமெரிக்காவின் நிர்வாகத் தலைநகர் வொஷிங்டன் டி.ஸிக்கு அழைத்துள்ள அமெரிக்க இராஜாங்க அமைச்சு, அதேசமயம் கூட்டமைப்பின் இணக்கத்தோடு உலகத் தமிழர் பேரவையின் (Global Tamil Forum) பிரதிநிதிகள் குழுவையும் அக்கலந்துரையாடல்களுக்கு அழைத்துள்ளது எனத் தெரிய வருகின்றது.

இன்று முதல் அடுத்த ஐந்து நாள்களுக்கு இக்குழுவினர் அமெரிக்க உயரதிகாரிகள் மட்டத்துடன் இராஜதந்திரக் கலந்துரையாடல்களில் ஈடுபடுவார். ☞10

## ரி20 உலகக்கிண்ணத்தை வென்றது ஆஸ்திரேலியா!



நியூசிலாந்து அணியை 8 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி 2021 ரி20 உலகக் கிண்ணத்தை ஆஸ்திரேலியா அணி சுவீகரித்துள்ளது.

ரி20 உலகக்கிண்ண ☞10

## சுமந்திரன்,சாணக்கியன் இருவரையும் கனடா,பிரிட்டன் பேச்சுக்கு அழைப்பு

### ஒட்டாவாவில் 23 இல்; லண்டனில் 25 இல்!



கொழும்பு, நவ.15

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் பேச்சு நடத்துவதற்காக அமெரிக்கா சென்றுள்ள கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரனின் எம்.பியை அமெரிக்கப் பேச்சுக்களை முடித்துக் கொண்டு திரும்பும் வழியில் தங்களது வெளிவிவகார அமைச்சு அலுவலகங்களுக்கு வருகை தந்து அங்குள்ள உயர் மட்ட இராஜதந்திரிகளுடன் கலந்துரையாடலை ☞2



## ஒரே நாளில் 23 பேர் தொற்றால் மரணம்

இலங்கையில் கொரோனாத் தொற்றினால் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை மீண்டும் அதிகரித்துவருவதாகக் ☞10

## அங்கொட லொக்காவின் இரண்டு சகாக்கள் கைது பெங்களூரில் சிக்கினர்!

இலங்கையின் பிரபல பாதாளக் குழுத் தலைவரான அங்கொட லொக்கா எனப்படும் நபரின் நெருக்கத்துக் ☞2

## வவுனியாவில் வயோதிப மாது தொற்றால் சாவு

வவுனியாவில் கொவிட் தொற்றுக் காரணமாக பெண் ஒருவர் மரணமடைந்துள்ளார் என சுகாதாரப் பிரிவினர் ☞10

## நவ. 20 நினைவு கூரல் அழைப்பு கத்தோலிக்கர்களுக்கு மட்டுமே!

### தங்கள் நிலைப்பாட்டை தெளிவுபடுத்துகிறார் திருமலை ஆயர்



திருகோணமலை, நவ.15

உள்நாட்டுபோரினால் இறந்து போனவர்களையும் அதன் விளைவாக பாதிக்கப்பட்டவர்களையும் நினைவு கூர்ந்து நவம்பர் 20 ஆம் திகதி இறைவேண்டல் செய்யுமாறு விசேடமாக நாம் கத்தோலிக்கர்களையே வேண்டினோம்.

– இவ்வாறு தங்கள் நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்துகின்றார் திருகோணமலை ஆயர் வண. நோயல் இமானுவல் ஆண்டகை. இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நவம்பர் மாதம் இறந்தவர்களை நினைவுகூரும் மாதமாக எமது திருச்சபையில் உள்ளது. அதனடிப்படையில் இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டு போரினால் இறந்து போனவர்களையும் அதன் விளைவாக பாதிக்கப்பட்டவர்களையும் ☞2

## கார்த்திகை வீரர்கள் தினம் நேற்று யாழில் ஜே.வி.பியினர் அனுஷ்டிப்பு



(கலையமுதன்)

யாழ்ப்பாணம், நவ.15

மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பியின்) ஸ்தாபகத் தலைவரான றோஹண விஜேவீர மற்றும் ஏனைய ☞2

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தவிசாளர் பொருத்தமற்றவர், விவரம் தெரியாதவர் என்று பொருமும் கட்சியின் மாவட்டத் தலைமை சம்பந்தப்பட்ட தவிசாளரைப் பதவி விலகும்படி பல விதமாகச் சொல்லில் பார்த்து விட்டது. விடயம் நடப்பதாக இல்லை.

"இந்தப் பிள்ளையை இருத்திய நேரம் ஒரு தென்னம்பிள்ளை நட்டிருந்தால் பிரயோசனமாக இருந்திருக்கும்" – என்று கட்சி வட்டாரங்கள் கருதும் அளவுக்கு நிலைமை.

வருட இறுதியில் சபையின் வரவு – செலவுத் திட்டத்தைத் தோற்கடித்து, தவிசாளரைக் கவிழ்த்து, பதவி விலகுவது மாவட்டத் தலைமையின் திட்டம். அதாவது தம் கட்சித் தவிசாளரை தாமே பதவி கவிழ்க்கும் சூழ்ச்சி. அவர் பதவி இழந்த பின்னர் பொருத்தமானவரைப் புதிய தவிசாளராக நியமிக்கும் அதிகாரம் பெரும்பான்மையை வைத்திருப்பதால் தமது கட்சிக்கே கிட்டும் என்ற நம்பிக்கையில் காய்கள் நகர்த்தப்படுகின்றன எனத் தகவல். சிற்றரசரின் அதிகாரம் அவர் பிரதேசத்தில் பாதாளம் வரைப் பாயுமல்லவா? அதனால் இவ்விடயம் குறித்து கட்சி அலட்டிக் கொள்ளாமல் பார்த்திருக்கும் என்பது தான் பெரும்பாலும் நடக்கும்.

★ ★ ★

அரசியல் தரப்புகளின் பிரதிநிதிகளாக அதிகாரத்துக்கு வருவோர் கண்மண் தெரியாமல் வாயினால் உத்தரவு கொடுப்பார்கள். வேறு வழியின்றி – விவரம் புரியாமல் – அவற்றை நிறைவேற்றும் அரச அதிகாரிகள் பாடுதான் பிறகு பெருஞ்சிக்கல். அதிகாரம் கைமாறியதும், புதிது புதிதாகக் கேள்விகள், விசாரணைகள் கிளம்பும். முன்னர் வாய் மூலம் உத்தரவு பிறப்பித்த அரசியல் தலைவர்களும் அவர்களின் பிரதிநிதிகளும் அப்போது காணாமல் போய் விடுவர். வாயால் அவர்கள் சொன்ன உத்தரவை நிறைவேற்றினேன் என்று கூறி அரச அதிகாரி அப்போது தப்பி விட முடியாது.

இப்படியொரு சிக்கல் வடக்கின் அரச அதிகாரிகளுக்கு இப்போது வந்திருக்கின்றது. அரசியல் தலைமைத்துவத்தின் பிரதிநிதி – அரச சேவையிலேயே முன் பின் இருக்காதவர் – வந்து, அதிகார மிடுக்கில் கண்மண் தெரியாமல் உத்தரவுகளை வாயால் பிறப்பிக்க, அவர்கள் செய்வதறியாது தடுமாறிப் போய் நிற்கின்றனர்.

அந்த வகையில் ஆசியாவின் அதிசயம் ஒன்றுக்கு அந்தப் பிரமுகர் வாய் மூலம் உத்தரவு கொடுத்திருக்கின்றார்.

குழப்பங்களின் உச்சம் என்று கருதப்படும் ஒரு பெண்மணிக்கு 59 வயது. அவருக்கு அந்த வயதில் அரச நியமனத்தை வழங்கி உறுதிப்படுத்துமாறு வாய் மூலப் பணிப்பு. பார்த்தார் அதிகாரி. அப்படி ஓர் உத்தரவில் தாம் கையயழுத்திட்டால் தமக்கு ஓய்வூதியமும் கிடைக்காது என்பது புரிந்தமையால் மெல்ல மறுத்து விட்டார்.

"நீங்கள் எழுத்தில் உத்தரவு தந்தால் நிரந்தர நியமனக் கடிதம் கொடுப்பேன். இல்லையேல் என்னை வற்புறுத்தாதீர்கள்." – என்று பட்டவர்த்தனமாகச் சொல்லி விட்டார் அதிகாரி.

அடிக்கடி ஆள்கள் மாற்றப்பட்டு பந்தாடப்படும் பதவியில் தாம் இருந்து கொண்டு, அதிகாரிகளின் ஜீவனை எடுக்கும் உத்தரவுகளைப் பிறப்பிப்பது பொருத்தமற்றது. அவருக்காக அரச அதிகாரிகளை அவர்களின் எதிர்காலத்தையே தியாகம் செய்ய வேண்டிய இக்கட்டுக்குத் தள்ளுவது ஆளுமையான பதவி நிலைப் போக்கல்ல... புரிந்தால் சரி!

– மின்னல் –

## நவ.20 நினைவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நினைவுகூர்ந்து இறைவேண்டல் புரிய வடக்கு கிழக்கு மாகாண கத்தோலிக்க ஆயர்களாகிய நாம், நவம்பர் மாதம் மூன்றாம் சனிக்கிழமையை தீர்மானித்தோம்.

வடக்கு கிழக்கு மாகாண கத்தோலிக்க ஆயர் பேரவை தற்போதுதான் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதனூடாக தமிழ் மக்களின் பிரச்சினைகளை எடுத்துரைத்து வருகிறோம். அதனடிப்படையில் மேற்படி இறைவேண்டலை அறிவித்திருந்தோம். இம்முறை 20 ஆம் திகதி அந்த நினைவேந்தல் நாள் வருகின்றது.

இவ் விடயம் குறித்து பல விமர்சனங்கள் எழுந்துள்ளன. எம்முடன் இதைப் பற்றி கலந்துரையாடாமல் தாமே முடிவெடுத்து பலர் கருத்துக்கள் தெரிவிப்பது வருத்தமளிக்கிறது. அவர்களே ஒரு விடயத்தை தீர்மானித்து அவர்களே அறிக்கை விடுகிறார்கள்.

நாம் அழைப்பு விடுத்தது கத்தோலிக்கர்களுக்கு மட்டுமே. விரும்பினால் ஏனைய மதத்தினரும் இணைந்துகொள்ள முடியும் என தெரிவித்திருந்தோம்.

நவம்பர் மாதம் 21 ஆம் திகதி தொடக்கம் 27 ஆம் திகதி வரைக்குமான நினைவேந்தல் நிகழ்வு தேசிய மட்டத்தில் நினைவு கூரும் விடயம். அதை யாரும் தடுக்க முடியாது. அதை நிறுத்துவதற்கோ மாற்றுவதற்கோ எமக்கு என்ன அதிகாரம் உள்ளது? எந்த வகையான அதிகாரமும் எமக்கு இல்லை. அதில் நாம் தலையிடவும் இல்லை. அதைத் தவிர்த்து இதைசெய்யுங்கள் என்றும் மக்களுக்கு நாம் சொல்லவில்லை. அவ்வாறான சிந்தனையும் எமக்கு இல்லை.

நவம்பர் 21 ஆம் திகதி தொடக்கம் 27 ஆம் திகதி நடைபெறும் வழமையான நிகழ்வு நடந்தே தீரும். அதை மாற்ற நாம் முயலவும் இல்லை அதற்கு எமக்கு உரிமையும் இல்லை.

மே மாத முள்ளிவாய்க்கால் நினைவேந் தலை குழப்புவதாகவும் விமர்சித்தார்கள். அது அனைவராலும் முடிவுசெய்யப்பட்ட முள்ளிவாய்க்கால் நினைவு தினம். அதை மாற்ற நாம் சிந்திக்கவே இல்லை. அதே போல் நவம்பர் 21தொடக்கம் 27 வரையான நாள் தேசிய தலைவரால் முடிவு செய்யப்பட்டு அறிவிக்கப்பட்ட தினம். அதை நாம் ஏன் மாற்ற வேண்டும்?

அதற்கு பதிலாக 20 ஆம் திகதி நினைவேந்தல் செய்யவும் என்று நாம் கூறவில்லை. ஆலயங்களில் வழிபாடு செய்யுங்கள் என்றுதான் கூறினோம். 20 ஆம் திகதி கத்ததோலிக்கர்கள் நினைவேந்தல் செய்வதால் நவம்பர் 27 ஆம் திகதி வருடா வருடம் நடைபெறும் விடயங்கள் எந்த வகையிலும் மழுங்கடிக்கப்படாது. அந்த நோக்கம் எமக்கு இல்லை என்பதில் தெளிவாக இருக்கிறோம்.

ஆயர் பேரவை தமிழ் மக்கள் சார்ந்து செயற்படுகிறது. மக்களுக்காக தான் குரல் கொடுக்கிறோம். கிறிஸ்தவர்கள் என வரும் போது பழிவாங்கும் எண்ணம் எமக்கு இல்லை. ஒரு மனிதர் தமது தவறை உணர்ந்து செயற்படும் போது அதற்கு ஒப்புரவாகி சமாதானமாகத்தான் போக வேண்டும். ஆனால் சிலருடைய கருத்து, சிந்தனை எல்லாம் எப்போதும் பழிவாங்க வேண்டும் என்பதுதான். அதற்கு நாங்களும் உடந்தையாக இருக்க வேண்டும், இணங்கிப் போக வேண்டும், அவர்களின் சிந்தனையின் கீழ் நாம் செல்ல வேண்டும் என எதிர்பார்க்கிறார்கள். அதன்படி செயற்பட எம்மால் முடியாது. கிறிஸ்தவ விழுமியங்கள், பண்புகள் உள்ளன. அவற்றை மீறினால் கத்தோலிக்க ஆயர்கள் என்று சொல்வதில் அர்த்தம் இல்லை எனவே அதில் நாம் தொளிவாக இருக்கிறோம். அந்த பின்னணியில் நாம் தான் 20 ஆம் திகதியை முடிவு செய்தோம். கத்தோலிக்கர்களுக்கு மட்டு அழைப்பு விடுத்தோம். – என்றார்.

## கார்த்திகை வீரர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கொல்லப்பட்ட அந்த இயக்க உறுப்பினர்களின் ஞாபகார்த்தமாக அனுஷ்டிக்கப்படும்

32ஆவது 'கார்த்திகை வீரர்கள் தினம்' நேற்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

அக்கட்சியின் யாழ் மாவட்ட அமைப்பாளரும் மத்திய குழு உறுப்பினருமான இராமலிங்கம் சந்திரசேகர் தலைமையில், யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது கட்சி அலுவலகத்தில் மதியம் 2.30 மணியளவில் இந்நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.

கார்த்திகை வீரர்களின் ஞாபகார்த்தம் என்பது

1989 நவம்பர் 13 ஆம் திகதி ஜே.விபியின் ஸ்தாபகர் றோஹண விஜேவீர படுகொலை செய்யப்பட்டார். ஒவ்வொரு வருடமும் அதனை ஜே.வி.பியினர் நினைவு கூருவது வழமையாகும்.

யாழ்ப்பாணத்தில் இந்த நினைவு தினம் இடம்பெற்றது இதுவே முதற்தடவையாகும்.

படுகொலை செய்யப்பட்டவர்களை நினைவுகூரும் வகையில் தீபங்கள் ஏற்றப்பட்டமையுடன் மலரஞ்சலியும் மேற்கொள்ளப்பட்டது. அக்கட்சி உறுப்பினர்கள் சுகாதார நடைமுறைப்படி இந்த நினைவேந்தலில் கலந்து கொண்டனர்.

## சுமந்திரன், சாணக்கியன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நடத்தும்படி கனடாவும் பிரிட்டனும் அழைத்துள்ளன.

சுமந்திரன் குழுவினரின் அமெரிக்கப் பயணம் முடிவான சமயத்தில் கொழும்பில் உள்ள கனடா மற்றும் பிரிட்டிஷ் தூதுவர்கள் கொழும்பில் உள்ள கூட்டமைப்புத் தலைவர் இரா.சம்பந்தனைத் தொடர்புகொண்டு இந்த அழைப்பை விடுத்தனர்.

சுமந்திரனின் வருகையின் போது அவருடன் சாணக்கியனையும் இணைத்துக் கொள்ளுமாறு மேற்படி இரு தூதரகங்கள் சார்பிலும் அழைப்பு முன்வைக்கப்பட்டதாகவும் தெரியவந்தது.

இதனையடுத்து இரா.சம்பந்தன், தமிழரசுத் தலைவர் மாவை சேனாதிராசா, துணைத் தலைவர் செல்வராஜா, பதில் பொது செயலாளர் மருத்துவர் ப.சத்தியலிங்கம் ஆகியோர் இந்த அழைப்புக் குறித்துத் தமக்குள் கலந்துரையாடிய பின்னர் அதனை ஏற்று சந்திப்புக்களில் ஈடுபடுமாறு சுமந்திரனுக்கும் சாணக்கியனுக்கும் வழிகாட்டல் வழங்கினர் எனவும் அறியவந்தது.

தற்போது அமெரிக்காவில் கலந்துரையாடல்களில் ஈடுபட்டிருக்கும் கூட்டமைப்பின் மூவர் குழுவில் சுமந்திரன் தவிர்ந்த மற்றிருவரு அமெரிக்கப் பேச்சுக்களை முடித்துக் கொண்டு இலங்கை திரும்புவர். சுமந்திரன் மட்டும் அமெரிக்காவிலிருந்து கனடா பயணமாவார். அங்கு அவருடன் சாணக்கியன் எம்.பி. இணைவார் எனத் தெரிகின்றது.

எதிர்வரும் 23ஆம் திகதி ஒட்டாவாவில் கனேடிய வெளியுறவுத்துறை அதிகாரிகளுடனும் –

அதற்கு இரண்டு நாள் கழித்து 25ஆம் திகதி லண்டனில் பிரிட்டிஷ் வெளிவிவகாரத்துறை அதிகாரிகளுடனும் –

சுமந்திரன் – சாணக்கியன் குழு நேரடிப் பேச்சுக்களில் ஈடுபட்ட பின்னர் கொழும்பு திரும்பும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## அங்கொட லொக்கா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

குரியவர்கள் இருவர் இந்தியாவில் சிக்கியிருக்கின்றனர் என இந்திய ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

இந்த நபர்கள் இருவரும் பெங்களூரில் இந்தியப் புலனாய்வு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டிருக்கின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையிலிருந்து தப்பிச்சென்ற அங்கொட லொக்கா என்ற சந்தேக நபர் பிரதீப் சிங் என்ற பெயரில் கோவை – சேரன்மாநகர் பகுதியில் வசித்து வந்த நிலையில் கடந்த வருடம் ஜூலை 4 ஆம் திகதி திடீர் சுகயீனம் காரணமாக உயிரிழந்திருந்தார் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

கோயம்புத்தூர் அரச மருத்துவமனைக்கு போலி சான்றிதழ்களை சமர்ப்பித்து பெறப்பட்ட அங்கொட லொக்காவின் சடலம் மதுரையில் தகனம் செய்யப்பட்டமை விசாரணைகள் மூலம் தெரியவந்திருந்தது.

இந்தச் சம்பவம் தொடர்பான வழக்கு இந்தியாவின் மத்திய குற்றப்புலனாய்வு அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டதை அடுத்து, அங்கொட லொக்காவின் காதலி என கூறப்படுகின்ற இலங்கையை சேர்ந்த அமானி தான்ஜி, சடலத்தை எரிக்க உடந்தையாக இருந்த மதுரையைச் சேர்ந்த சட்டத்தரணி சிவகாமி சுந்தரி மற்றும் திருப்பூரை சேர்ந்த தியானேஸ்வரன் ஆகியோர் கைது செய்யப்பட்டனர்.

இவர்களில் சிவகாமி சுந்தரி, தியானேஸ்வரன் ஆகியோருக்கு பிணை வழங்கப்பட்ட நிலையில் அமானி தான்ஜி தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

அங்கொட லொக்கா, இந்தியாவில் தங்குவதற்கு அடைக்கலம் கொடுத்த அவரது இரண்டு நண்பர்களும் தேடப்பட்டு வந்தனர்.

இந்த நிலையில், பெங்களூருவில் பதுங்கியிருந்த அந்துரகிரிய பகுதியைச் சேர்ந்த 38 வயதான சனுக்க தனநாயக, பெங்களூருவை சேர்ந்த 46 வயதான கோபாலகிருஷ்ணன் ஆகியோரை அதிகாரிகள் கைது செய்தனர் இந்திய தகவல்கள் தெரிவிக்கின்றன.

சந்தேகநபர்கள் கோயம்புத்தூர் நீதிபதி சஞ்சீவி பாஸ்கர் முன்னிலையில் ஆஜர்ப்படுத்தப்பட்டமையை அடுத்து பெருந்துறை கிளை சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று இந்திய ஊடகங்கள் மேலும் தெரிவித்துள்ளன.



# வரவு – செலவுத் திட்டத்தில் அரச ஊழியர்கள் புறக்கணிப்பு தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடவுள்ளதாக அறிவிப்பு!

2022 வரவு செலவுத் திட்டத்தின் மூலம் அரச ஊழியர்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளனர் என அரசாங்க உத்தியோகத்தர்களின் தொழிற்சங்கங்களின் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

இந்த நிலைமை தொடர்பாக எதிர்வரும் வாரங்களில் அவதானம் செலுத்தாவிடின், எந்தவொரு முன்னறிவிப்பும் இன்றி தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடப்போவதாக அந்த சம்மேளனம் மேலும் தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாக குறித்த சம்மேளனம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கு கடிதம் மூலம் அறிவித்துள்ளது.

கடந்த 12 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட 2022 வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளில் இலங்கையில் உள்ள அரச ஊழியர்களின் சம்பளம் தொடர்பாக திட்டங்கள் முன்வைக்கப்படவில்லை எனவும் இதனால் 1.5 மில்லியன் அரச உத்தியோகத்தர்களும் அவர்களை நம்பி வாழும் ஏறக்குறைய 60 லட்சம் மக்களும் வாழ்க்கையை நடத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக அந்தக் கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நான்கு பேர் கொண்ட குடும்பம் ஒன்றுக்கு மாதாந்தம் 58 ஆயிரம் ரூபா அவசியம் என அண்மைய கணக்கெடுப்பொன்றில் தெரிவிக்கப்பட்டிருந்ததெனவும் எனினும் தற்போது அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் வேகமாக உயர்ந்து வருகின்றமையால் இந்நிலை மிகவும் மோசமடைந்துள்ளதாக அந்தக் கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனவே இந்த நிலைமை தொடர்பாக எதிர்வரும் வாரங்களில் அவதானம் செலுத்தாவிடின், எந்தவொரு முன்னறிவிப்பும் இன்றி தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடபோவதாக அந்தச் சங்கம் தெரிவித்துள்ளது.

இதற்கான பொறுப்பை அரசாங்கமே ஏற்றுக்கொள்ள வேண்டுமெனவும் அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழ் சிங்கள புத்தாண்டுக்கு பாற்சோறு கூட கிடைக்காது!

## சம்பிக்க வருத்தம்

எதிர்வரும் தமிழ் சிங்கள சித்திரை புத்தாண்டு தினத்தில் பாற்சோறு உட்கொள்வதற்கு முடியாத ஒரு வருட பிறப்பாக மாறும் அபாயம் ஏற்பட்டுள்ளது என நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

நுவரெலியாவில் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் இவ்வாறு ஏற்பட்டுள்ள டொலர் பிரச்சினைக்கு, 2022 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் எந்தவித தீர்வும் முன்வைக்கப்படவில்லை.

எரிபொருள், எரிவாயு உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்களை இறக்குமதி செய்வதற்குக் கூட முடியாத அளவிற்கு டொலர் பிரச்சினை பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளது.

உரம், கிருமிநாசி ஆகியவற்றுக்கான இறக்குமதி தடை மற்றும் மழையுடனான சீரற்ற வானிலை காரணமாக இன்று மரக்கறி விலைகள் வானம் அளவிற்கு உயர்வடைந்துள்ளன.

இவ்வாறு ஏற்பட்டுள்ள பாதிப்புக்களை பொதுமக்களால் பொறுத்துக்கொள்ள முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

இதனால், மக்களின் வர்த்தக நடவடிக்கைகள் வீழ்ச்சி அடைந்துள்ள பின்னணியில், அவர்கள் கொள்ளையடிக்கும் நிலைக்கும், தற்கொலை செய்துக்கொள்ளும் நிலைக்கும் தள்ளப்பட்டுள்ளனர்.

எதிர்வரும் தமிழ் சிங்கள சித்திரை புத்தாண்டு தினத்தில் பாற்சோறு உட்கொள்வதற்கு முடியாத ஒரு வருடப் பிறப்பாக மாறும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இனிவரும் காலங்களில் பழைய தலைவர்களுக்கு இந்த நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்ல முடியாது என்பரத ஜனாதிபதி உள்ளிட்ட அனைத்து தரப்பினரும் ஏற்றுக்கொண்டுள்ளனர் எனக் கூறிய அவர், நாட்டை புதிய தலைமுறைக்குக் கையளிக்க வேண்டும்.

இதேவேளை, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியிலுள்ள அங்கத்துவ கட்சிகளுக்கு மாத்திரமன்றி, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி உறுப்பினர்களுக்குக் கூட இன்று தமது பிரதேசத்துக்குச் செல்ல முடியாத நிலைமை எழுந்துள்ளதாக அவர் தெரிவிக்கின்றார்.

வாழ்க்கை செலவு அதிகரித்துள்ள பிரச்சினையை அனைத்து மக்களும் எதிர்நோக்கியுள்ளமை மற்றும் விவசாயிகளுக்கு உரம் கிடைக்காத பிரச்சினை ஆகியவற்றாலேயே இவர்களுக்குத் தமது பிரதேசத்துக்குக் கூட செல்ல முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறான பிரச்சினைகளை மறைப்பதற்காகத் தனிமைப்படுத்தல் சட்டம், இரகசிய பொலிஸாரை முறையற்ற விதத்தில் பயன்படுத்துதல், பயங்கரவாதத் தடுப்பு சட்டத்தைத் தவறாகக் கையாளுதல் போன்ற செயற்பாடுகளில் அரசாங்கம் ஈடுபட்டு வருவதாக அவர் குற்றஞ்சுமத்துகின்றார்.

இவ்வாறான விடயங்களால், இந்தப் பிரச்சினைகள் வலுப்பெறும் எனவும், மக்களை இனிவரும் காலங்களில் தடுத்து நிறுத்த முடியாது எனவும் அவர் கூறுகின்றார்.

Jaffna College Institute of Technology
Calls for the following courses

Computer Certificate Courses (*3 – 4 months Part time*)

- Certificate in MS OFFICE – (MS Word, Excel, Access & PowerPoint)
- Certificate in Graphic Designer – (PageMaker, PhotoShop & CorelDraw)
- Computer Hardware Technician
- Web Designing(HTML, CSS, JAVA Script, PHP, MYSQL)
- Java, C++ Programming

Commencement in November 2021
At Our Jaffna Centre along
(Jaffna College Undergraduate dept. Building)
464 Hospital Road
Jaffna.
For further details contact
Tel no: 0212250975/0212223382
Email: ejcit@sltnet.lk.

# சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலையில் உலக நீரிழிவுதின விழிப்புணர்வு கண்காட்சி

சர்வதேச நீரிழிவு தினத்தை முன்னிட்டு சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலையில் விழிப்புணர்வு நிகழ்ச்சி திட்டமும் கண்காட்சியும் இடம்பெற்றது.

இந்த நிகழ்வு சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலையின் மாவட்ட வைத்திய அதிகாரி வைத்தியர் எம்.எச்.கே. சனூஸ் காரியப்பரின் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் தொற்றுநோய் தடுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் எம்.ஐ.எம்.எஸ் இர்ாத், தாதிய பரிபாலகர் பீ.எம்.நசுறுதீன் உட்பட வைத்திய அதிகாரிகள் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இதன்போது நீரிழிவு நோய் தொடர்பான விழிப்புணர்வு துண்டுப் பிரசுரங்கள் வழங்கி வைக்கப்பட்டதுடன் ஆரோக்கியமான உணவு பழக்கவழக்கங்கள் குறித்த கண்காட்சியும் இடம்பெற்றது.

# 30 முன்னாள் எம்.பிக்களுக்கு உயரடுக்கு பாதுகாப்பு ஏற்பாடு

## வெடித்தது சர்ச்சை

சுமார் 30 முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு கடந்த 15 மாதங்களாக உயரடுக்கு பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாக அரசாங்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

முன்னாள் அமைச்சர்கள் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மேலதிகமாக, முன்னாள் ஆளுநர்கள் குழுவிற்கும் உயரடுக்கு பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வருடம் ஓகஸ்ட் மாதம் இடம்பெற்ற பொதுத் தேர்தலில் தோற்கடிக்கப்பட்ட இந்த அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு தலா இரண்டு தேர்ந்த மெய்ப்பாதுகாவலர்கள் வழங்கப்பட்டுள்ளனர் எனவும் அவர்கள் பிரதான அரசியல் கட்சிகளை சேர்ந்தவர்கள் எனவும் தெரியவந்துள்ளது.

இதேவேளை, மாநகர சபையொன்றின் முன்னாள் முதல்வர் ஒருவருக்கும் பல வருடங்களாக உயரதிகாரிகள் பாதுகாப்பு வழங்கி வந்த நிலையில், அவரது இரண்டு மெய்ப்பாதுகாவலர்கள் கடந்த வாரம் நீக்கப்பட்டனர் எனவும் தெரியவருகின்றது.

கடந்த புதன்கிழமை நாடாளுமன்றத்தில் நடைபெற்ற மக்கள் பாதுகாப்பு தொடர்பான ஆலோசனைக் குழுவில் முன்னாள் எம்.பி.க்கள் மற்றும் அமைச்சர்களுக்கு சிறப்புரிமைப் பாதுகாப்பு வழங்குவதற்கு எதிராக நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவொன்றும் எதிர்ப்புத் தெரிவித்ததாக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அதன் அடிப்படையில் முன்னாள் எம்.பி.க்கள் மற்றும் அமைச்சர்களுக்கு இவ்வாறு உயரடுக்கு பாதுகாப்பு வழங்கப்படுகின்றது என பின்வரிசையை பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர் பிரமித பண்டார தென்னகோன் மீண்டும் மீண்டும் கேள்வி எழுப்பியுள்ளார்.

முன்னாள் பாதுகாப்பு அமைச்சர்கள், பொலிஸாருக்குப் பொறுப்பான அமைச்சர்கள் போன்ற விசேட நபர்களுக்கு முன் பாதுகாப்பு வழங்குவதில் பிரச்சினை இல்லை எனவும், ஆனால் அவ்வாறு இல்லாதவர்களுக்கு பாதுகாப்பு வழங்குவதில் சிக்கல் இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

முன்னாள் எம்.பி.க்கள் மற்றும் அமைச்சர்கள் சிலர் இந்த தேர்ந்த மெய்ப்பாதுகாவலர்களை போராட்டங்களுக்காகவும் தமது வியாபார நடவடிக்கைகளுக்காகவும் அழைத்துச் செல்வதாக நாடாளுமன்ற உறுப்பினர் குறிப்பிட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. இந்த விடயம் தொடர்பில் உடனடியாக ஆராயவுள்ளதாக பொது பாதுகாப்பு அமைச்சர் ரியர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

# கையிருப்பில் உள்ள பசளைகளை விவசாய அமைச்சு பெற உள்ளது

இலங்கையின் சில மாவட்டங்களில் பெய்த மழையால் விவசாயிகள் முன்னர் பயன்படுத்திய சேதனப்பசளைகள், வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்ட நிலையில், விவசாயிகளுக்கு வழங்குவதற்காக நாட்டில் இன்னும் இருப்பில் உள்ள இரசாயனப் பசளைகளை விவசாய அமைச்சு பெற்றுக் கொள்ளவுள்ளது.

அண்மைய நாள்களில் பெய்த மழையால் நுவரெலியா, பதுளை மற்றும் பண்டாரவளை ஆகிய மாவட்டங்களில் மரக்கறி மற்றும் பழ உற்பத்தியாளர்கள் பயன்படுத்திய சேதனப் பசளைகள் அடித்துச் செல்லப்பட்டுள்ளன என விவசாய அமைச்சின் தரப்புக்கள் தெரிவித்துள்ளன.

இதனையடுத்து அவசர நடவடிக்கைகளை எடுக்காவிட்டால், காய்கறிகளின் விலை கடுமையாக உயரும் என்று அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில் அவசர நடவடிக்கையாக, பசளை இறக்குமதியாளர்களின் களஞ்சியங்களில் உள்ள இரசாயனப் பசளை இருப்புகளை விவசாயிகளுக்கு வழங்குவதற்கான ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என அமைச்சா குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை நெல் விவசாயிகளின் பயிர்கள் சேதம் அடைந்திருந்தால் அவர்களுக்கு இழப்பீடு வழங்குமாறு விவசாய காப்புறுதிச் சபைக்கு அறிவித்துள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## ஆளுநரின் விளக்கம் என்ன?

அதிகாரப் பகிர்வில் முக்கியமான பதவி மாகாண ஆளுநர்.

நாட்டின் ஜனாதிபதி தமது பிரதிநிதியையே ஆளுநராக நியமிப்பார். அவர் ஜனாதிபதியின் வழிகாட்டலில் – அவரது நம்பிக்கைக்குரியவராக – செயற்பட வேண்டும் என்பது நியதி. அது நீதியும் கூட.

ஆனால், ஜனாதிபதியின் சார்பில், அவரின் அரசியலை முன்னெடுப்பதற்கான பதவி அல்ல ஆளுநர் கதிரை.

நிறைவேற்றதிகார ஜனாதிபதியின் நிறைவேற்றதிகாரங்கள் வேறு. அவர் நடத்தும் அரசியல் வேறு.

ஜனாதிபதியின் பணியாளர் தொகுதியைச் சேர்ந்தவர்கள், அவரின் நிறைவேற்றதிகார ஜனாதிபதிக்குரிய கடமைகளை அவர் ஆற்றுவதற்கு உதவும் பணியாளர்களே தவிர, அவர் அரசியல்வாதியாக ஆற்றும் அரசியல் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைக்கும் ஊழியர்கள் அல்லர்.

இது ஜனாதிபதியினால் நியமிக்கப்படும் ஆளுநருக்கும் பொருந்தும்.

மன்னார் பிரதேச சபையின் தவிசாளர் பதவி தொடர்பில் வடக்கின் புதிய ஆளுநர் சத்தம் சந்தடியின்றி – வெளியில் தெரியாமல் – காதோடு காது வைத்தால் போல – எடுத்திருக்கும் நடவடிக்கை தனது மேல் நிலை அதிகாரத் தரப்பாரின் அரசியலை இங்கு வந்து வடக்கு ஆளுநர் செயற்படுத்தி முன்னெடுக்கின்றாரோ என்ற சந்தேகத்தை வடக்கு மக்கள் மனதில் விதைப்பதாக இருக்கின்றது.

ஆளுநர், இந்த நாட்டு ஜனாதிபதியின் பிரதிநிதியாகத்தான் இங்கு பணியாற்றுகின்றார். அதுவும் மக்களால் தெரிவு செய்யப்பட்ட மாகாண சபை இல்லாத சமயத்தில் ஆளுநரின் பங்கு, பணி, பொறுப்பு அதிகம். அது கவனமாகப் கையாளப்பட வேண்டியது.

தாம் ஜனாதிபதியின் அரசியலை இங்கு செய்வதற்கு வரவில்லை, மக்களுக்கு உண்மையான – நேர்மையான – நீதி, நியாயமான – சேவையை ஆற்றவே இப்பதவிக்கு வந்துள்ளேன் என்ற நம்பிக்கையை ஆளுநர் தமது பிரதேச மக்களிடம் பெற்றால்தான் அப்பணியில் அவர் சிறக்க முடியும்.

அந்த விடயத்தில் – மக்களின் மனதை வெற்றி கொள்கின்ற விவகாரத்தில் – ஓர் அம்சத்தை நமது வடக்கு ஆளுநர் புரிந்து கொள்ளவேண்டும்.

அவரது பணியைப் பொறுத்தவரை மக்களுக்கு “நீதி, நிலைநாட்டப்படுவது மட்டுமன்றி நிலைநட்டப்படுவது போல காட்டப்படவும் வேண்டும்” – என்ற நியதியை அவர் மறந்து விடக் கூடாது.

ஓய்வு பெற்ற நீதிபதி ஒருவரின் தலைமையிலான விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கையின் – பரிந்துரையின் – பேரில் இந்தப் பிரதேச சபைத் தவிசாளரை முன்னைய ஆளுநர் பதவியிலிருந்து நீக்குகின்றார். உள்ளூராட்சி சபைகள் சட்டப்படி அது சரியான ஒழுங்கு.

அதேசமயம், ஒரு புறம் அந்த ஆளுநர் மாற்றப்பட புதியவர் நியமிக்கப்படுகின்றார். மறுபுறம் பதவி இழந்த தவிசாளரின் அரசியல் தலைவர் – நீண்ட காலம் தடுப்புக் காவல் சிறையில் வைக்கப்பட்டவர், திடீரென எல்லா வழக்குகளும் ஒன்றாக அழைக்கப்பட்டு, பிணையில் விடுவிக்கப்படுகின்றார்.

அதனையடுத்து, பதவி விலக்கப்பட்ட அவரின் ஆதரவாளரான தவிசாளரின், பதவி விலக்கல் அறிவிப்பு புதிய ஆளுநரால் ரத்துச் செய்யப்பட்டு, அவர் மீண்டும் பதவியில் உறுதிப்படுத்தப்படுகின்றார்.

இவை எல்லாம், சந்தர்ப்ப வசத்தாலோ என்னவோ ஒரே சமயத்தில் பொருந்தி வருகின்றன. நீதி நிலைநாட்டப்படுவது போன்ற நம்பிக்கையை அவை வடக்கு மக்களுக்குத் தரவில்லை என்பதுதான் உண்மை.

முன்னைய ஆளுநர் மேற்படி தவிசாளரைப் பதவி விலக்கியமைக்குக் காரணம் உண்டு. உள்ளூராட்சிச் சபைகள் சட்டப்படி, ஓய்வுபெற்ற நீதி அலுவலர் ஒருவர் மூலம் விசாரணை நடத்தி, அந்த விசாரணை அறிக்கையின் படிதான் பழைய ஆளுநர் நடவடிக்கை எடுத்திருந்தார்.

ஆனால், அந்த நடவடிக்கையை ரத்துச் செய்யும் முடிவை தம்மிஷ்டப்படி புதிய ஆளுநர் ஏன் எடுத்தார்? அதற்கான தற்றுணிவு அதிகாரம் தமக்கு உண்டு என்று கருதி, அதனை புதிய ஆளுநர் மேற்கொண்டிருந்தாலும் கூட, அதன் பின்னால் நீதி, நியாயம் ஏதும் இருப்பின் – அவற்றை மக்களுக்கு ஆளுநர் தெளிவுபடுத்தும் வரை மக்களின் மனதை அவர் வெல்ல முடியாது. அது வரையில் மேலதிகாரத்தின் அரசியல் விருப்புகளை நிறைவு செய்யும் ஏவல் பணியாளராகவே மக்கள் அவரைக் கருதுவர்.

# நாட்டைக் கட்டியெழுப்புகின்ற திட்டமிருப்பின் முன்வைக்குக!

## எதிர்க்கட்சிக்கு ஜோன்ஸ்டன் சவால்



தம்பட்டம் அடிக்காது நாட்டின் பிரச்சினைகளை எப்படித் தீர்க்கலாம் என்ற தீர்வை 24 மணி நேரத்தில் மக்களுக்கு முன்வைக்குமாறு நெடுஞ்சாலை அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ எதிர்க்கட்சிகளுக்கு சவால் விடுத்துள்ளார்.

ஊடகங்களுக்குக் கடந்த ஞாயிற்றுக்கிழமை அனுப்பி வைத்துள்ள செய்திக்குறிப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர் தெரிவிக்கையில்–

இன்று முழு உலகமும் நெருக்கடியில் உள்ளது. கொரோனாத் தொற்று நோயால் நம் நாடு மட்டுமல்ல, உலகின் அனைத்து நாடுகளும் நிதி நெருக்கடிக்கு முகங்கொடுத்துள்ளன. ஆனால் நமது அரசாங்கம் அந்த நெருக்கடியை நன்றாகவே கையாளுகிறது.

பொருள்களின் விலை குறைக்கப்படவில்லை என்று எதிர்க்கட்சிகள் கூறுவதை கண்டேன். அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ் மட்டுமன்றி உலகின் அனைத்து நாடுகளிலும் பணவீக்கம் அதிகரித்துள்ளது. இந்த பணவீக்கம் அதிகரிப்பு நம்மை மட்டும் பாதிக்கவில்லை.

இன்று தொழில்நுட்பம் முன்னேறிவிட்டது. இணையத்தைக் கொஞ்சம் பயன்படுத்தி பாருங்கள். நம் நாட்டில் தான் பிரச்சினைகள் இருக்கின்றமை போல் பொய்களைப் பரப்பாதீர்கள். நமது நாட்டில்தான் பண வீக்கம் அதிகம் என்று எதிர்க் கட்சிகள் காட்ட முயல் கின்றன.

கொரோனா தொற்று நோயால் அனைத்துப் பொருள்களின் விலையும் உயர்ந்துள்ளது. உலகில் பொருள்களின் உற்பத்தி குறைந்துள்ளது. தொழில் துறை வலையமைப்புக்கள் உலகளவில் சரிந்துள்ளன. பலதரப்பு மற்றும் இருதரப்பு உதவிகள் குறைந்துள்ளன.

கொரோனா நெருக்கடியால் மற்ற நாடுகளுக்கு எல்லா நாடுகளாலும் உதவ வழி இல்லை. ஏனெனில் ஒவ்வொரு நாடும் அதன் உள்நாட்டுப் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும். எனவே உலகின் ஒவ்வொரு நாடும் இதுபோன்ற விடயங்களால் செல்வந்த நாடுகளில் இருந்து கடன் மற்றும் உதவி பெறுவதில் சிக்கல் உள்ளது.

உற்பத்திப் பொருளாதாரத்தை நோக்கி நாம் செல்ல வேண்டும். நாம் ஒவ்வொரு நாளும் யாரையும் சார்ந்து இருக்க முடியாது என்பதை இந்தக் கொரோனா தொற்று நோயின் காரணமாக அனைவரும் உணர்ந்துள்ளனர். அபிவிருத்திச் செயற்பாடுகள் தொடர வேண்டியதும் அவசியமாகும். ஏனென்றால் இனியும் எமது நாட்டை பின்நோக்கிச் செல்ல இடமளிக்க முடியாது.

வீதிகள் உள்ளிட்ட உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தினால்தான் நாடு வளர்ச்சி அடையும். எதற்காக வீதிகள் அமைக்கப்படுகின்றன என்று எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வினவுகின்றனர். நாட்டை அபிவிருத்தி செய்யத்தான் வீதிகள் அமைக்கப்படுகின்றன. இவை எதிர்காலத்துக்கான முதலீடுகள். எதிர்க்கட்சி எம்.பி.க்கள் எங்களிடம் கூட வீதிகள் நிர்மாணித்து தருமாறு கேட்கிறார்கள். அவர்களுக்கு வீதிகளின் மதிப்பு தெரியும். அவ்வாறு கேட்டவாறே வீதிகள் எதற்காக என்றும் வினவுகின்றனர்.

அத்துடன் இந்த வருட வரவு – செலவுத் திட்டத்தில் ஒவ்வொரு கிராம உத்தியோகத்தர் பிரிவுக்கும் தலா 30 லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆளும் தரப்பு மற்றும் எதிர்த்தரப்பு எம்பிக்களுக்கு 50 லட்சம் வழங்கப்பட்டுள்ளது. எங்களுக்கு கட்சிகள் அன்றி மக்கள் சேவைதான் முக்கியம். சமுர்த்தித் திட்டம் கிராம அபிவிருத்தித் திட்டமாக மாற்றப்பட்டுள்ளது.

எம்பிகள் ஓய்வூதியம் பெற 10 ஆண்டுகள் காத்திருக்க வேண்டும் என்று இந்த பட்ஜெட்டில் முன்மொழிந்துள்ளோம். நாடாளு மன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசாங்க அதிகாரிகளின் எரிபொருள் சலுகை குறைக்கப்பட்டுள்ளது. தொலைபேசி கட்டணம் 25 வீதத்தால் குறைக்கப்பட்டுள்ளது. அரசு செலவினங்களை குறைக்க நாம் முன்னுதாரணமாகத் திகழ்கிறோம்.

உற்பத்திப் பொருளாதாரத்தை நோக்கி நாம் செல்ல வேண்டும். கொரோனா தொற்றால் அழிந்த பொருளாதாரத்தைச் சீர் செய்ய உலக நாடுகள் முயற்சிக்கின்றன. பொருள்களின் விலை உயர்வு தற்காலிகமானது. தேவைக்கு ஏற்ப விநியோகம் இல்லாத போது, பொருள்களின் விலை உயரும், பொருள்கள் தட்டுப்பாடு ஏற்படும் .

மீண்டும் சந்தைக்கு பொருள்கள் வரும்போது, மீண்டும் விலை குறைகிறது. முழு உலகிலுமே நெருக்கடி ஏற்பட்டுள்ள சமயத்தில் எதிரணி தம்பட்டம் அடித்து வருகின்றன . தம்பட்டம் அடிக்கும் நிலையில் அவர்கள் நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் வேலைத்திட்டத்தை தயாரித்திருப்பார்கள். அதனால் பொருளாதாரம் வீழ்ச்சி அடைந்திருந்தால் மீட்டெடுப்பதற்கான வழியை மக்களுக்கு 24 மணி நேரத்தில் முன்வைக்குமாறு எதிர்க்கட்சியினருக்கு சவால் விடுகின்றேன். எதிர்க்கட்சியிடம் எந்தத் திட்டமும் இல்லை என்பதுதான் உண்மையான விடயம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

வடமாகாண மரநடுகை மாதம்
கார்த்திகை - 2021
“மரம்தான் மரம்தான் எல்லாம் மரம்தான்
மறந்தான் மறந்தான் மனிதன் மறந்தான்
மனிதன் மனிதனாக வேண்டுமா
மரத்திடம் வா... ஒவ்வொரு மரமும் போதிமரம்!”
- கவிஞர் வைரமுத்து



### ஐ. நா. சபையின் சர்வதேச சட்ட ஆணைக்குழுவுக்கு

# இலங்கை சார்பில் போட்டியிட்ட மொஹான் பீரிஸ் தோல்வி!



ஐக்கிய நாடுகள் சபையின் சர்வதேச சட்ட ஆணைக் குழுவிற்கு இலங்கையின் சார்பில் போட்டியிட்ட முன்னாள் பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் தோல்வியடைந்துள்ளார். ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கையின்வதிவிடப்பிரதிநிதியாகநியமிக்கப்பட்டுள்ள மொஹான் பீரிஸ், ஐக்கிய நாடுகள் சபையின் சர்வதேச சட்ட ஆணைக்குழுவிற்கான தேர்தலில் போட்டியிடுவதற்காக இலங்கை சார்பில் பரிந்துரைசெய்யப் பட்டிருந்தார்.

இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் 2008 - 2011 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் சட்டமா அதிபராகவும் 2013 ஆம் ஆண்டில் பிரதம நீதியரசராகவும் பதவிவகித்தவர் என்ற அடிப்படையில் பொறுப்புக்கூறலையும் நீதியையும் நிலைநாட்டத்தவறிய மொஹான் பீரிஸ், இனப்படுகொலைகள், போர்க்குற்றங்கள் மற்றும் மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளும் சர்வதேச சட்ட ஆணைக்குழுவிற்குப் பரிந்துரைக்கப்பட்டமை தொடர்பில் உண்மைக்கும் நீதிக்குமான சர்வதேச செயற்திட்டம் கடுமையான கண்டனத்தை வெளிப்படுத்தியிருந்தது. அத்துடன், ஐ.நாவின் சர்வதேச சட்ட ஆணைக்குழுவிற்கு பிலிப்பைன்ஸ் சார்பில் ஹரி ரொக் மற்றும் இலங்கையின் சார்பில் மொஹான் பீரிஸ் ஆகியோர் பரிந்துரை செய்யப்பட்டமையை நிராகரிக்குமாறு வலியுறுத்தி சமூகநீதி மற்றும் மனித உரிமைகளை வலுப்படுத்தும் நோக்கில் பிலிப்பைன்சைத் தளமாகக்கொண்டியங்கும் அமைப்பால் விழிப்புணர்வுக் கலந்துரையாடல்களும் நடத்தப்பட்டுவந்தன.

இந்நிலையில் சர்வதேச சட்ட ஆணைக்குழுவின் ஆசிய பிராந்தியத்துக்குரிய 8 ஆசனங்களுக்கு 11 பேர் போட்டியிட்டனர். அதற்கான தேர்தல் வெள்ளிக்கிழமை நடைபெற்ற நிலையில், அதில் போதியளவு வாக்குகள் கிடைக்கப்பெறாமல் மொஹான் பீரிஸ் தோல்வியடைந்திருக்கின்றார்.

அவரது தோல்வி தொடர்பாக உண்மைக்கும் நீதிக்குமான சர்வதேச செயற்திட்டம் உள்ளடங்கலாக சர்வதேச சிவில் சமூக அமைப்புக்கள் மற்றும் மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள் தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் சர்வதேச சட்ட ஆணைக்குழுவிற்கு ஆசியப்பிராந்தியத்தின் சார்பில் இந்தியா, தாய்லாந்து, ஜப்பான், வியட்நாம், சீனா, கொரியா, சைபிரஸ் மற்றும் மொங்கோலியா ஆகிய நாடுகளிலிருந்து பிரதிநிதிகள் தெரிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 2 வருடமாக நாடு வங்குரோத்து நிலைக்கு சென்றுள்ளதை அரசு புரிந்துகொண்டுள்ளது

### நளின் பண்டார சுட்டிக்காட்டு



அரசாங்கத்தின் கீழ் நாடு கடந்த இரண்டு வருடங்களாக வங்குரோத்து நிலைக்குச் சென்றுள்ளதையே இந்த வரவு செலவுத் திட்டம் காட்டுவதாக நளின் பண்டார தெரிவித்துள்ளார்.

இம்முறை சமர்ப்பிக்கப்பட்ட வரவு - செலவுத்திட்டம் தொடர்பாக நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.


பொதுமக்கள் மற்றும் வர்தகர்களிடம் இருந்து வழக்கத்துக்கு மாறான வரிகளை வசூலிப்பதன் மூலம் அரசாங்கம் செயற்படுகின்றது எனக் குற்றம் சாட்டினார்.

தவறான கூற்றுக்கள் மூலம் வரவு - செலவுத் திட்டதின் ஜதார்த்தத்தை மறைக்க அரசாங்கம் முயற்சிக்கிறது என்றும் நளின் பண்டார தெரிவித்துள்ளார்.

மேலும் விவசாயிகளின் நெருக்கடி உள்ளிட்ட உண்மையான பிரச்சினைகளுக்குத் தீர்வுகள் வழங்கப்படவில்லை என்றும் நளின் பண்டார கூறினார்.

## ஒத்த அறிகுறிகளுடன் பரவும் தொற்றுக்கள்!

### மக்களே அவதானம்



நாட்டில் அமுலில் இருந்த பயணக்கட்டுப்பாடு மற்றும் சுகாதாரப் பாதுகாப்பு வழிகாட்டல்கள் தளர்த்தப்பட்டதன் பின்னரான காலப்பகுதியில் கொவிட் வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக வைத்தியர் வாசன் ரட்ணசிங்கம் தெரிவித்துள்ளார்.

இவ்வாறானதொரு சூழ்நிலையில் மக்கள் பெருமளவில் ஒன்றுகூடுவதற்கு வாய்ப்பேற்படுத்தும் போராட்டங்களால் தொற்றுப்பரவல் அச்சுறுத்தல் மேலும் அதிகரிக்கும்.

ஆகவே, போராட்டங்கள் மற்றும் தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடும்போது உரிய சுகாதாரப்பாதுகாப்பு வழிகாட்டல்கள் முழுமையாகப் பின்பற்றப்படுவது மிகவும் அவசியமாகும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், அண்மைக்காலத்தில் டெங்குப்பரவலும் தீவிரமடைந்துவருவதாகச் சுட்டிக்காட்டிய அவர், கொவிட் -19 வைரஸ்தொற்று மற்றும் டெங்குநோய் ஆகிய இரண்டினதும் அறிகுறிகள் பெருமளவிற்கு ஒத்தவையாக இருப்பதால் மக்கள் அவதானத்துடன் செயற்படவேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

## சீன நிறுவனத்தின் இழப்பீட்டு கோரிக்கை சட்டமா அதிபர் திணைக்களம் ஆராய்வு

சேதன பசளையை ஒப்பந்தம் தொடர்பாக 80 லட்சம் அமெரிக்க டொலர்கள் இழப்பீடு கோரி சீன நிறுவனம், தேசிய தாவரங்கள் தொற்றுநீக்கி தனிமைப்படுத்தும் சேவை நிலையத்துக்குக் கடிதத்தை அனுப்பியுள்ளது.

இந்த இழப்பீட்டுக் கோரிக்கைக் கடிதத்துக்கு இதுவரை பதிலளிக்கப்படாத நிலையில், அந்தக் கடிதம் தொடர்பிலும், அதன் சட்ட நியாயாதிக்கம் தொடர்பிலும் சட்ட மா அதிபர் திணைக்களம் தீவிரமாக ஆராய்ந்து வருவதாகத் திணைக்களத்தின் தகவல்கள் வெளிப்படுத்தியுள்ளன.

தேசிய தாவரங்கள் தொற்றுநீக்கி தனிமைப்படுத்தும் சேவை நிலையத்தின் அலட்சிய நடவடிக்கையால், தமது நிறுவனத்தின் நற்பெயருக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புக்களுக்காக இந்தத் தொகையை குறித்த நிறுவனம் கோருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை அனுப்பட்டுள்ள இந்தக் கடிதம், தேசிய தாவரங்கள் தொற்றுநீக்கி தனிமைப்படுத்தும் சேவை நிலையத்தின் பணிப்பாளர் ஊடாக மேலதிக சட்ட ஆலோசனைகளைப்பெற்றுக்கொள்வதற்காக சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

## அரசுடன் பேசுவதற்கு எப்போதும் நாம் தயார்

### கூட்டமைப்பு பகிரங்க அறிவிப்பு



அரசாங்கத்துடன் பேச்சு நடத்த எப்போதும் தயாராகவே இருப்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

எந்த அரசாங்கத்தோடும் பேச்சு நடத்தத் தயாராக இருப்பதாகவும் அதற்கான கதவுகளை மூடியதில்லை என்றும் கூட்டமைப்பின் நாடாளுமன்றஉறுப்பினர்சிறிதரன் தெரிவித்தார்.

தமிழ் மக்கள் எதிர்நோக்கும்பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஆளும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சாந்த பண்டார விடுத்த அழைப்புக்குப் பதிலளிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

கடந்த காலங்களில் கூடத் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் முயற்சியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசாங்கத்துடன் 13 சுற்றுப் பேச்சு நடத்தியதாக சிறிதரன் கூறினார்.

## கலால் சட்டத்தினை மீறிய குற்றத்தில் 516 பேர் கைது

இம்மாதம் முதல் வாரத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புக்களில் கலால் சட்டத்தைமீறியகுற்றச்சாட்டில் 516பேர்கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

நவம்பர் முதலாம் திகதி முதல் 8 ஆம் திகதி வரை மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது குறித்த சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர் எனக் கலால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கலால் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் 391 பேரும், ஆபத்தான போதைப் பொருள் கட்டளைச் சட்டத்தை மீறியதற்காக 73 பேரும் இதன்போது கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும், புகையிலை வரி சட்டம் மற்றும் புகையிலை மற்றும் மதுபானம் தொடர்பான தேசிய அதிகாரசபை சட்டத்தை மீறியமைக்காக 52 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

05 மில்லியனுக்கும் அதிகமான வழக்கு பொருள்கள் இதன்போது கைப்பற்றப்பட்டனஎனகலால்திணைக்களம் தெரிவித்துள்ளது.

கலால் உரிம நிபந்தனைகளை மீறிய சம்பவம் தொடர்பில் உரிமம் பெற்ற 87 நிலையங்களுக்கு எதிராக அதிகபட்ச தண்டனையை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.



**- செல்லத்துரை ரவீந்திரன் -**

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங் காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். ‘இனப்படுகொலை’, ‘இனச்சுத்திகரிப்பு’ ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## அங்கம் - 192

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

**485. இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை அனுசரித்து 13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்தியிருந்தால் தமிழ் மக்களது வாழ்வு மேம்பட்டிருக்குமோ?**

இன்றிலிருப்பதை விட பன்மடங்கு வித்தியசமானதாக வடக்கும், கிழக்கும் இணைந்த ஒரு மொழிவாரி பிரதேசத்தை சுயாட்சியாக அனுபவித்திருக்கக் கூடும். தமிழ் மக்களது அத்திபாரம் இந்தியாவின் அனுசரணையில் (அடிவருடலில் அல்ல) அமைந்து அவர்களுடன் சேர்ந்து அவர்களது வல்லாதிக்க நிலையோடு இணக்கம் கண்டு முன்னேற வேண்டும் என்பது எனது அபிப்பிராயம்.

அது ஓர் அணுகுமுறை. அதன் விம்பமாக துருக்கி சைப்பிரஸில் உள்ளீடு செய்தமையையும் அங்கு உள்ள துருக்கியர் நிலைமையையும் சுட்டிக் காட்டியி



ருந்தேன்.

மாறாக, விடுதலைப் புலிகளும் அவர்களது புத்திஜீவிகளும் பிரேமதாஸா வுடன் சேர்ந்து கூட்டாக இந்தியா வெளியேற வேண்டும் என நிர்ப்பந்

தித்து, சைப்பிரஸ் மாதிரி இருந்த சர்வதேச பிரச்சினையை உள்நாட்டு சமாச்சாரமாக மாற்றினார்கள். அதன் ஆக்கங்களையும் தாக்கங்களையும் பார்க்க அந்த சமயத்தில் ராஜீவ் காந்திக்கும் பிரேமதாஸாவுக்கும் இடையில் இருந்த கடிதக் கோப்பை கவனிக்க வேண்டும்.

தாங்கள் தொடர்ந்து நடத்திய ஆயுதப் போராட்டத்தாலும் அர்ப்பணிப்புக்களாலும் அவற்றை சமயோசிதமாக பேச்சுகளில் பயன்படுத்தி இடைக்காலங்களை உறுதிப்படுத்தி புலிகள் முன்னேறியிருந்தால் சிறப்பாக இருந்திருக்கலாம்.

13 ஆம் திருத்தத்தை அமுல்படுத்த இணங்காமல், அதிலிருந்த பல அதிகாரங்களையும் தூர்படவிட்டு, யுத்தத்தால் பெற்ற இடைக்கால அரசையும் இழந்து, பால் திரைந்த நிலையில் மேம்பாடு என்று எதை நினைப்பது?

**486. 33 வருடங்களின் பின்னராவது 13 ஆம் திருத்தத்தை அமுல்படுத்தக் கோரும் கோரிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றனவா?**

ஒரு நிராதரவற்ற நிலையிலிருந்து முன்னெடுப்பவர்கள் இதைக் கோருகிறார்களா அல்லது சில ஊடகங்களும் இணையத்தளங்களும் விமர்சிப்பது போல் இந்தியாவின் பின்னணியில் இயங்குகிறார்களா என்பது தெளிவில்லை. 13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்த வேண்டும் எனக் கோருபவர்கள் கூட இன்றைய சூழலில் (அதாவது 33 வருடங்களின் பின் ‘ஒரே நாடு; ஒரே சட்டம்’ என்பது கட்டவிழ்க்கப்பட்ட நிலையில்) அது எப்படி அமுல்படுத்தப்பட வேண்டும் என சிந்தித்து செயலாற்றுவதாகத் தெரியவில்லை. அதை அமுல்படுத்த வேண்டும் என்பது தேர்தல் அரசியலுக்காகவும் கட்சிகளுக்கிடையே இருக்கும் உட்பூசல்களில் அடையாளங்களைத் தக்க வைத்துக்கொள்ளவும் என்பது போன்ற தோற்றங் களையும் தருகிறது.

அத்தோடு அதனை அமுல்படுத்துவது தீர்வுக்கான முதற் புள்ளியா, அதுதான் நிரந்தர தீர்வா, அதில் என்ன இருக்கிறது அதனைத் தொடக்க புள்ளியாகவாவது ஏற்பதற்கு என்ற பல அபிப்பிராயங்கள் வருகின்றன. அவை வழமையானவைதான். இந்தச் செருப்பைப் போட்டால்தான் அடியெடுத்து வைப்பேன் என்ற வைராக்கியத்திலோ மனோபாவத்திலோ இல்லாமல், தாங்கள் கடக்க வேண்டிய தூரத்தின் முதல் அடியாகத் தமிழ்மக்கள் தங்கள் காலை எடுத்து முன்வைக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

ஆனால் அவர்களின் தறிகெட்ட அரசியல் கூட்டமைப்பிலேயே பிரளயமெடுத்து, அதன் ஒற்றுமையே கேள்விகுறியாகியுள்ளது. தமிழ் தலைவர்கள் எல்லோரும் ஒரே ஒத்த நிலைப்பாட்டில் இதனை அமுல்படுத்தக் கோர வேண்டும் என இந்தியா கேட்டதில் கூட ஒரு புரிந்துணர்வு எட்டப்படவில்லையோ என்று கூடத் தோன்றுகிறது. மிகவும் அண்மையில் நடந்த கூட்டத்துக்கு அழைப்பு பெற்று மனோ கணேசனும் ரவூப் ஹக்கீமும் பங்குபற்றியிருக்கிறார்கள். வரவேற்க வேண்டிய முன்னேற்றம். யுத்தம் நடந்துகொண்டிருந்த காலங்களிலேயே கொழும்பில் இருந்து மிகவும் ஆணித்தரமாக, எவ்வளவோ மிரட்டல்களுக்கு மத்தியிலும், தமிழ் மக்களுக்காகக் குரல் கொடுத்தவர் மனோ கணேசன். வளரும் பேரினவாதத்துக்கு எதிராக அவர்கள் முஸ்லிம் மக்கள் எல்லோரையும் இணைந்து ஒன்றாக அவர்களது தேசியங்களைப் பாதுகாக்கப் பயணிக்க வேண்டுவது யதார்த்தமான நகர்வே. இதுவரை காலமும் அரசாங்கத் துடன் சேர்ந்து, அவர்களிடமிருந்து ஏதோ பெற்று விடலாம் என்று எண்ணியவர்கள் கூட, வளர்ந்து வரும் சூழலில் அவை பகற்கனவே என்ற எண்ணம் கொண்டவர்களாக இருந்தும், தாங்கள் மழைக்குத் தப்பி ஏறிப்பிடித்த மரக்கொப்பிலிருந்து இறங்கமுடியாதவர்களாய் இருக்கி றார்கள். அவர்கள் தமிழ்த் தேசியப் பரப்பில் இயங்காதவர்கள் அல்லர், அணுகுமுறையில் அவர்களுடன் கூட இந்த விடயத்தில் இணக்கம் காணப்படவேண்டும். இன்றைய அரசியல் முன்னெடுப்புக்களில் தமிழர் தாயகத்தில் வாழ்கின்ற மக்களின் உணர்வுகள், கடந்த 30 வருடங்களாக நடந்த போரினாலும், அதைத் தொடர்ந்து நடத்தப்பட்ட அரசியல் வித்தகங்களாலும், புலத்தில் வாழ்பவர்களின் கட்டமைப்புக்கள் எல்லாம் தத்தம் அகங்காரங்களினாலும் அதிலெழுந்த போட்டிகளின் பிரிவினைகளாலும் சின்னாபின்னமாகி இருக்கின்ற பரிதாப நிலையில், தமிழ் மக்களுக்கு நன்மைகள் பெற்றுக் கொடுக்கக்கூடிய மூலோபா யங்கள், வியூகங்கள், ஏற்பாடுகள் போன்றவற்றை அமைத்துச் செயல்பட வேண்டிய தேவைகளே எழுகின்றன. வழமை போன்ற பாணியில் காரியங்களை முன்னெடுக்காது, அதை விட்டு வழமை போல் தங்களது கோசங்களிலேயே யதார்த்தமற்ற நிலையில் நிற்கின்றமை, பெருகி வரும் பேரின



வாதச் சிந்தனையில் அவர்களை அடித்துச் சென்று விடும்.

**487. எப்படியாக 13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்தக் கேட்க வேண்டும் என்று அபிப்பிராயப்படுகின்றீர்களா?**

தமிழ் மக்களினதும், முஸ்லிம் மக்களினதும் பரந்த நிலைப்பாட்டிலுள்ள அணுகுமுறையை ஏற்படுத்தி, அந்தத் திருத்தம் தொடக்கப் புள்ளி யாகவாயினும் இருக்கக் கூடியதற்கு இன்றைய சூழலில் அதில் எவ்வாறான அதிகாரங்கள் நடைமுறைப்படுத்துவதற்கு கையளிக்கப்பட வேண்டும் என பட்டியலிடப்பட வேண்டம். ஏனெனில் இந்த 33 வருடங்களில் நல்லாட்சி காலங்களில் கூட கையளிக்கப்பட்டிருந்த எத்தனையோ அதிகாரங்கள் மீளப்பெறப்பட்டுள்ளன. ஆகவே, அதனை முன்னெடுப்பவர்கள். முதலில் இதனை அமுல்படுத்த விரும்பும் அரசியல் கட்சிகள், அதனை அமுல்படுத்திய காலங்களிலிருந்து அதனில் அனுபவம் பெற்றவர்களையும் இணைத்து, எவை பாதிக்கப்பட்டன, எவை மீளப் பெற வேண்டும், எவை தரப்பட வேண்டும் என வரிசைப்படுத்தி அதனை முதலாவதாக ஶ்ரீலங்கா அரசுக்கு பேச்சிலேயே தீர்மானம் மூலமாகக் கால எல்லையிட்டு தெரியப் படுத்த வேண்டும். அந்தக் கால எல்லையில் ஶ்ரீலங்காவின் நிலையை ஒட்டி அவற்றுக்கு அழுத்தம் தர இந்தியாவை அணுகவேண்டும். அதைவிட்டு பொதுவாக 13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்துவது என பேசுவதும், கூடுவதும், கோசங்கள் போடுவதும் வினைத்திறனற்ற செயல்களாகவே அமையும்.

13 ஆம் திருத்தத்தை நீர்த்துப் போகச் செய்ய ஜே.ஆர். கொண்டு வந்த மாகாண சபைச் சட்டங்களே பல குளறுபடிகளுக்கு வழிச்செய்தது. அரசியல் தலைமையைப் பொறுப்பேற்றிருந்த விடுதலைப் புலிகளின் நிலைப்பாடும், அதைத் தொடர்ந்து மாகாண சபைகளைப் பதவியேற்றோரின் தீர்க்கதரிசனமின்மையோ, இயலாத்தன்மையோ அரசாங்கத்துக்கு சந்தர்ப்பங்களைக் கொடுத்தன. அதிகாரங்கள் 13 இன் கீழ் மாகாணசபைக்கு வழங்கப்பட்டன. ஆனால் ஜே.ஆரினது மாகாண அமுலாக்க சட்டத்தின் ஏற்பாடுகளில் மாகாணங்களிலிருந்த மாவட்ட சபைகள் மத்திய அரசின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டன. விடுதலைப் புலிகள் மாகாண சபைகளைப் புறக்கணித்து போரிலிருந்தார்கள். ஆகவே இப்படியான முரண்பட்ட அதிகாரங்களே நடந்தன. இவற்றை மாகாண ரீதியில் அமுல்படுத்தியவர்களின் அனுபவங்களில் முதலில் இந்த முரண்பாடு தீர்க்கப்பட்டு 13 ஆம் திருத்தத்தின் படி மாகாணங்கள் இணைக்கப்பட்டு, ஒரு அதிகார அலகாக மாற்ற வேண்டும் என்று கேட்கப்பட வேண்டும். இதைச் சொல்லும் பொழுதே நீதி மன்றத்தின் உத்தரவில் அதை பிரித்து விட்டார்களே என்ற முனகல் இயலாத்தன்மையில் வெளிப்படுவது கேட்கிறது. தமிழ் மக்களுக்கு தரப்பட்ட உரிமை கேட்கப்பட வேண்டும். அது அரசால் மறுக்கப்பட்டால், அது இந்தியா அழுத்தம் கொடுத்து, இந்திய ஒப்பந்தத்தின் அடிப்படையில் நிறைவேற்ற வேண்டிய அரசியல். போர் நடந்து கொண்டிருந்த கடைசிக் காலங்களில் கூட பிரதமர் மன்மோகன் சிங், மஹிந்த ராஜபக்ஷவிற்கு ஶ்ரீலங்கா செய்தது தவறு, அந்தப் பிரிப்பை இந்தியா ஏற்றுக் கொள்ளாது, அது சர்வதேச ஒப்பந்தத்தில் ஏற்படுத்தப்பட்ட இணக்கம் எனக் கூறியிருந்தார். ஆகவே, அதை நடைமுறைப் படுத்தச் செய்ய வேண்டியது இந்தியாவின் பொறுப்பாகும்.

அடுத்து ஆளுநரின் அதிகாரம் மாகாண சபைக்கும் அதன் அமைச்சரவைக்கும் வரவேண்டும். ஆளுநர் பெயரளவில் அரசாங்கத்தின் பிரதிநிதியாக இயங்க வேண்டுமேயொழிய அதிகாரம் கொண்டவராக இயங்க முடியாது. காணி, பொலிஸ் அதிகாரங்கள் தரப்பட்டு, அவை பற்றி மாகாண சபை சட்டங்கள் இயற்றப்பட வேண்டும். சில மாற்றங்கள் மாகாண சபை பட்டியலிலும், மத்திய அரசின் பட்டியலிலும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

பொலிஸ் அதிகாரம் என்றவுடன், அரசின் நிலையில் நாட்டில் ஒன்பது (09) பொலிஸ் நிர்வாகங்கள் அமைக்க முடியாது, செலவு என்றெல்லாம் கூக்குரல்



எழலாம். ஆனால் அது ஜே.ஆர். செய்த ஏற்பாடேயொளிய, ஒப்பந்தம் அப்படிக் கோரவில்லை, தமிழர் பட்ட அவஸ்தைகளாலும், அட்டூழியங்களாலும் அவர்கள் தம்மொழி பேசும் பொலிஸ் அதிகாரத்துக்கு முன் வரவேண்டுமென்பதே நோக்கமாக இருந்தது. அது தற்சமயம் யதார்த்தமாகவும், காணியைப் பொறுத்தளவில் விட்டுக்கொடுக்க முடியாத உரிமையாகவும் உள்ளது. இவ்வளவையும் தந்து, ஒரு தொடக்க புள்ளியே ஆகாவிட்டால் அவற்றை இந்தியா பொறுபேற்க வேண்டும். அதற்குத் தமிழ் மக்களது ஒத்துழைப்பு இருக்க வேண்டும்.

அதைவிட்டு தேர்தல் நோக்கி கூட்டுக்கள் சேர்த்து, அதில் காலத்தை ஓட்டுவது தான் நோக்கம் என்றால் அப்படியே கையேந்தும் நிலையில்தான் தமிழ் மக்கள் இருப்பார்கள்.

(வளரும்....)

# லஞ்சம் மற்றும் ஊழல் மோசடி தொடர்பாக ஆதாரங்களுடன் அறிவித்தால் நடவடிக்கை


வடக்கு ஆளுநர் அதிரடி

வடக்கு மாகாணத்தின் அரச கட்டமைப்பில் காணப்படும் லஞ்சம் மற்றும் ஊழல் மோசடிகள் தொடர்பாக ஆதாரங்களுடன் அறிவித்தால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்துள்ளார். மக்களுக்கான சேவைகளை வழங்குவதற்கே அரச கட்டமைப்புக்கள் காணப்படுகின்றன என சுட்டிக்காட்டிய ஆளுநர், தான் பதவியேற்றதில் இருந்து வடமாகாண அரச கட்டமைப்புக்களின் பல்வேறு மட்டங்கள் தொடர்பாக அவதானம் செலுத்தியுள்ளதாகக் கூறினார்.

அரச கட்டமைப்பில் காணப்படும் ஊழல் மோசடிகள் தொடர்பாக சிலர் தன்னைத் தொடர்பு கொள்ளவதற்கு அல்லது சந்திப்பதற்கு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர் என அறிய கிடைத்துள்ளது எனவும் ஆளுநர் தெரி வித்தார்.

ஆகவே ஊழல், மோசடிகள் தொடர்பாக ஆதாரங்களுடன் எவரும் தன்னை நேரடியாக சந்தித்தோ அல்லது தொடர்புக்கொண்டோ தகவல்களை வழங்க முடியும் என ஆளுநர் ஜீவன் தியாகராஜா குறிப்பிட்டார்.

அவ்வாறு தகவல்கள் வழங்கப்படும் பட்சத்தில், உரிய விசாரணைகளை மேற்கொண்டு பாரபட்சமின்றி நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்குத் தயாராக இருப்பதாகவும் வடக்கு ஆளுநர் தெரிவித்தார்.

## அனுமதியின்றி ட்ரோன் இயக்கிய இருவர் கைது

விக்டோரியா அணை, விக்டோரியா நீர்த்தேக்கம் மற்றும் 4 ஆவது இயந்திரமயமாக்கப்பட்ட காலாட்படை பகுதிகளில் உரிய அனுமதியின்றி ட்ரோன் கமெராவை இயக்கிய இருவர் தெல்தெனிய பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்களில் ஒருவர் பெண் ஆவார்.

அவர்கள் 28 மற்றும் 34 வயதையுடைய கொஹட்டுவ மற்றும் களனி பகுதியைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

சந்தேக நபர்கள் தெல்தெனிய நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்படவுள்ளதுடன், இது தொடர்பான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## பொலிஸ் உத்தியோகத்தர் புதுக்குடியிருப்பில் மரணம்

முல்லைத்தீவு – புதுக்குடியிருப்பு பிரதேச பொலிஸ் நிலையத்தில் பணியாற்றிவந்த உப பொலிஸ் பரிசோதகர் நெஞ்சுவலி ஏற்பட்டு உயிரிழந்துள் ளார். இந்த சம்பவம் கடந்த சனிக்கிழமை இடம்பெற் றுள்ளது.

கடமையில் நின்ற வேளை நெஞ்சுவலி ஏற்பட்டு புதுக்குடியிருப்பு ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டபோது அங்கு அவர் உயிரிழந்துள்ளார். கேகாலை மாவட்டம் வரக்காப்பொல பகுதியைச் சேர்ந்த 56 வயதுடைய சுனில் ஜெயரத்தின என்ற உப பொலிஸ் பரிசோதகரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

மாரடைப்பு ஏற்பட்டு இவர் உயிரிழந்திருக்கிறார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளார்கள்.

இவரது சடலம் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு பிரேத பரிசோதனைகளின் பின்னர் குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## யுத்த காலத்தில் புதைக்கப்பட்ட தங்கம் தோண்டிய 6 பேர் கைது!

மன்னாரில் யுத்த காலத்தில் புதைக்கப்பட்டது எனச் சந்தேகிக்கப்படும் தங்கம் உள்ளிட்ட பொருள்களை எடுப்பதற்காக அகழ்வுப் பணியில் ஈடுபட்ட 6 சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

யுத்த காலத்தில் புதையுண்ட தங்கத்தை தேடும் பணியில் ஈடுபட்டிருந்த குழுவினர் அகழ்வுப் பணிகளை மேற்கொள்கின்றனர் எனக் கிடைத்த இரகசிய தகவலின் பேரில் மன்னார் பொலிஸார் மன்னார் இராணுவ முகாம் அதிகாரிகளுடன் இணைந்து கூட்டு நடவடிக்கையை மேற் கொண்டுள்ளனர்.

இதன்போது சந்தேக நபர்கள் பயணித்த வாகனமும், அகழ்வாராய்ச்சிக்குப் பயன்படுத்தப்பட்ட பொருள்களும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் 26 மற்றும் 60 வயதுடைய ஹெட்டிமுல்ல, கொடியாக்கும்பு, பாணந்துறை, பொரலந்த மற்றும் ஹல்பே ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

இந்நிலையில் சந்தேக நபர்கள் மன்னார் நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர்.

## புத்தளம் பகுதியில் விபத்து ஒருவர் பலி; இருவர் காயம்!



புத்தளம், கருவலகஸ்வெள பகுதியில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், சிறுவன் உட்பட இருவர் காயமடைந்துள்ளனர்.

வென்னப்புவ, லுணுவில, ரோஸ் மரியவத்தையைச் சேர்ந்த 74 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தந்தையே விபத்தில் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர். உயிரிழந்தவரின் 9 வயது பேரனும், மருமகனும் காயமடைந்த நிலையில் புத்தளம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அநுராதபுரத்தில் இருந்து வென்னப்புவ, லுணுவில பகுதியை நோக்கி மூவர் பயணித்த வான் ஒன்றே விபத்துக்குள்ளாகியுள்ளதாகப் பொலிஸார் குறிப்பிட்டனர். தொடர்ச்சியாக பெய்து வரும் மழை காரணமாக வேகக் கட்டுப்பாட்டை இழந்த குறித்த வான் வீதியை விட்டு விலகி வீதியோரத்தில் இருந்த மரம் ஒன்றில் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

சம்பவம் தொடர்பில் கருவலகஸ்வெல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# வருமானத்தை விடவும் நாட்டில் செலவு அதிகம்

### ஹபீர் ஹாசிம் கருத்து



நாட்டில் தனியார் சேமிப்பு மாத்திரமல்லாது அரசாங்கத்தின் வருமானமும் வீழ்ச்சியடைந்துள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசிம் தெரிவித்துள்ளார்.

உண்மையில் நோக்கும் போது நாட்டுக்குக் கிடைக்கும் வருமானத்தை விட செலவுகள் அதிகம் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாம் முறை வாசிப்பின் முதல் நாள் விவாதத்தில் கலந்துக்கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

நாட்டில் உற்பத்திகளை விட நுகர்வு அதிகரித்துள்ளது. இந்தப் பிரச்சினைக்கு இம்முறை வரவு செலவுத் திட்டத்தில் பதில் வழங்கப்படவில்லை.

இதனால், நிதி சமன் இன்மைக்கு தீர்வு வழங்க அரசாங்கம் தவறியுள்ளது. கடந்த இரண்டு ஆண்டுகளில் அரசாங்கம் இதனைச் செய்யவில்லை என்பதுடன் வரவு செலவுத் திட்டத்திலும் அதனைச் செய்யவில்லை.

இதற்கான நிரந்தர கொள்கை வரையறை அவசியம். அப்படியான கொள்கை வரையறையும் அரசாங்கத்திடம் இல்லை. தினமும் கிடைக்கும் வருவாயை கொண்டு நடத்தப்படும் அரசாங்கமாக தற்போதைய அரசாங்கம் மாறியுள்ளது எனவும் கபீர் ஹாசிம் குறிப்பிட்டுள்ளார்.

## நாட்டில் ஏழு மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்ட எச்சரிக்கை நீடிப்பு!

சீரற்ற வானிலை காரணமாக சில மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்டுள்ள மண்சரிவு அபாய எச்சரிக்கை தொடர்ந்தும் நீடிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக தேசிய கட்ட ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

இதற்கமைய கேகாலை, குருணாகல், இரத்தினபுரி, களுத்துறை, கண்டி மாத்தளை மற்றும் நுவரெலியா ஆகிய 7 மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்ட மண்சரிவு அபாய எச்சரிக்கையே இவ்வாறு நீடிக்கப்பட்டுள்ளது.

மேலும் பெருந்தோட்ட பகுதிகளில் வாழும் மக்களும் மண்சரிவு அபாயம் தொடர்பாக அவதானத்துடன் செயற்படுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

# வாகன இறக்குமதிக்கான சந்தை விரைவில் திறக்கப்பட மாட்டாது!

### நிதி அமைச்சு அறிவிப்பு

வாகன இறக்குமதிக்கான சந்தை விரைவில் திறக்கப்படாது என நிதியமைச்சு தெரிவித்துள்ளது. சனிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் நிதியமைச்சின் செயலாளர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த மார்ச் மாதம் வாகனங்களை இறக்குமதி செய்வதை நிறுத்திவிட்டோம். இறக் குமதிக்கு கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது. வாகன இறக்குமதிக்கு முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டும் என நான் நினைக்கவில்லை.

சிலர் என்னுடன் உடன்படாமல் இருக்கலாம். வாகனங்களை இறக்குமதி செய்ய இன் னும் 6 முதல் 7 மாதங்களாகும் வரை அதற் கான சந்தை திறக்கப்படமாட்டாது.

இதேவேளை, வரி அறவிடவுள்ள துறைகள் மற்றும் பொருள்கள் தொடர்பில் சனிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் பஸில் ராஜபக்ஷவிடம் கேள்வி எழுப்பப்பட்டது.

வரி விதிக்கப்படும் பல துறைகளை நாங்கள் அடையாளம் கண்டுள்ளோம். அதை வெளியிட்டால், அது அநியாயமாக இருக்கலாம். அந்தப்பொருள்கள் என்னவென்று கூற வேண்டாம் என நிதி அமைச்சின் செயலாளரால் எனக்கு அறிவுறுத்தப்பட்டது. அதனால் வரி அறவிடப்படும் பொருள்கள் மற்றும் அதில் இருந்து விடுவிக்கப்படும் பொருள்கள் என்ன என வெகு விரைவில் அறிந்துகொள்ள முடியும் என நிதி அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

## 65 ஆயிரத்து 704 குடும்பங்கள் சீரற்ற காலநிலையால் பாதிப்பு

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக இதுவரையில் 65 ஆயிரத்து 704 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

சீரற்ற காலநிலை காரணமாக 17 மாவட்டங்களில் உள்ள, 150 பிரதேசசெயலகப்பிரிவுகள் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளன.

அதன்படி, பதுளை, நுவரெலியா, மாத்தளை, கம்பஹா, கொழும்பு, மன்னார், இரத்தினபுரி, களுத்துறை, புத்தளம், அநுராதபுரம், யாழ்ப்பாணம், காலி, கேகாலை, குருணாகல், கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங்களே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளன என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இந்த மாவட்டங்களில் உள்ள 65 ஆயிரத்து 704 குடும்பங்களைச் சேர்ந்த 2 லட்சத்து 30 ஆயிரத்து 640 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என அந்த நிலையம் மேலும் தெரிவித்துள்ளது.

மேலும் இயற்கை அனர்த்தங்களில் சிக்கி இதுவரையில் 26 பேர் உயிரிழந்துள்ளனர்.

அவர்களில், புத்தளம் மாவட்டத்தில் 7 பேரும் கேகாலை, குருநாகல் மாவட்டங்களில் தலா 6 பேரும் பதுளை மாவட்டத்தில் நால்வரும் மாத்தளை, காலி, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் தலா ஒவ்வொருவரும் உயிரிழந்துள்ளனர். மேலும் அனர்த்தங்கள் காரணமாக 7 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

இதேநேரம், 49 வீடுகள் முழுமையாகவும், ஆயிரத்து 574 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

# அரசின் தடைகளைத் தகர்த்தெறிந்து மக்கள்வெள்ளம் கொழும்பில் திரளும்!

## ஐக்கிய மக்கள் சக்தி உறுதி

அரசாங்கத்துக்கு எதிரான மாபெரும் மக்கள் போராட்டத்தை எதிர்வரும் 16 ஆம் திகதி நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ள நிலையில், அதனைத் தடுத்துநிறுத்துவதற்கு அரசாங்கம் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது.

இருப்பினும் அதன் அடக்குமுறைகள் அனைத்தையும் கடந்து இந்தியாவின் புதுடில்லி விவசாயிகளால் சுற்றிவளைக்கப்பட்டதைப்போன்று, நாளை (செவ்வாய்க்கிழமை) பெருந்தொகையான மக்களால் கொழும்பு சுற்றிவளைக்கப்படும் என்று ஐக்கிய மக்கள் சக்தி அறிவித்துள்ளது.

அதுமாத்திரமன்றி, நாளை (செவ்வாய்க்கிழமை) பிற்பகல் 2 மணிக்கு ஹைட்பார்க் மைதானத்துக்கு வருகைதருமாறு நாட்டுமக்கள் அனைவருக்கும் அழைப்புவிடுத்திருக்கும் ஐக்கிய மக்கள் சக்தி, அந்த மைதானத்துக்குள் நுழைவது தடைசெய்யப்படுமேயானால், ஒட்டுமொத்த கொழும்பு மாநகரமும் ஹைட்பார்க் மைதானமாக மாற்றப்படும் என்றும் எச்சரித்திருக்கின்றது.

அரசாங்கத்துக்கு எதிராக நடத்தப்படவுள்ள மாபெரும் மக்கள் போராட்டம் தொடர்பில் தெளிவுபடுத்தும் நோக்கிலான ஊடகவியலாளர் சந்திப்பொன்று கொழும்பிலுள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமைக் காரியாலயத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அந்தச் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துவெளியிட்ட கட்சியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார இந்த விடயம் தொடர்பில் மேலும் கூறியவை வருமாறு -

அண்மைக் காலத்தில் அத்தியாவசியப்பொருள்களின் விலைகளில் ஏற்பட்டுள்ள சடுதியான அதிகரிப்பால் வாழ்க்கைச்செலவும் அதிகரித்திருக்கின்றது.

அதனால் பொதுமக்கள் அன்றாட வாழ்க்கையை சீராக முன்னெடுத்துச்செல்லமுடியாத நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றார்கள்.

அரிசி, சீனிபோன்ற அத்தியாவசியப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பதுடன் அவற்றைக் கொள்வனவு செய்வதற்காக நீண்ட வரிசைகளில் காத்திருக்கவேண்டிய நிலையேற்பட்டிருக்கின்றது.

அதுமாத்திரமன்றி, விவசாயம் மற்றும் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு அத்தியாவசியமான உரம், கிருமிநாசினி போன்றவற்றுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பதன் காரணமாக விவசாயிகள் மிகப்பாரிய நெருக்கடிக்கு முகங்கொடுத்திருக்கின்றனர்.

அதனால் நாட்டின் உணவுற்பத்தியில் வீழ்ச்சியேற்படுவதுடன் உணவுப்பஞ்சம் ஏற்படுவதற்கான சாத்தியங்களும் உருவாகியுள்ளன.

எனவே நாட்டுமக்களை ஒன்றுதிரட்டி, அரசாங்கம் மீதான அவர்களது அதிருப்தியையும் எதிர்ப்பையும் வெளிக்காட்டுவதற்கு நாம் திட்டமிட்டோம்.

அரசாங்கத்தின் செயற்பாடுகள் தொடர்பில் எதிர்ப்பை வெளிப்படுத்தும் ஜனநாயக உரிமை எமக்கும் பொதுமக்களுக்கும் இருக்கின்றது. ஆனால் அந்தப் போராட்டத்துக்குத் தடைவிதிப்பதற்கு அரசாங்கம் முற்படுகின்றது.

கொரோனா வைரஸ் தொற்றால் நாளாந்தம் 200 - 300 பேர் உயிரிழந்தபோது கூட வெளியிடப்படாத வர்த்தமானி அறிவித்தல் கடந்த 9 ஆம் திகதி சுகாதார அமைச்சரால் வெளியிடப்பட்டுள்ளது.

இருப்பினும் இது தொடர்பாக நாங்கள் ஜனாதிபதி சட்டத்தரணிகள் சிலரிடம் கலந்துரையாடி ஆலோசனை பெற்றிருக்கின்றோம். அதன்படி வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு சுகாதாரப்பாதுகாப்பு வழிகாட்டல்களை முழுமையாகப்பின்பற்றி மக்கள் போராட்டத்தை முன்னெடுப்பதற்குத் தீர்மானித்திருக்கின்றோம்.

அண்மைய காலங்களில் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டுவரும் ஆர்ப்பாட்டங்களை நிறுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவில்லை.

குறிப்பாக கடந்த வெள்ளிக்கிழமை ஐக்கிய தேசியக் கட்சியின் ஏற்பாட்டில் கொழும்பில் ஆர்ப்பாட்டமொன்று நடைபெற்றது. இவற்றிலிருந்து போராட்டங்களைத் தடுத்துநிறுத்துவதற்கான அதிகாரம் பொலிஸாருக்கோ அல்லது சுகாதாரத்தரப்பினருக்கோ வழங்கப்படவில்லை என்பது தெளிவாகின்றது.

அதுமாத்திரமன்றி எமது போராட்டத்தை மாத்திரமே அரசாங்கம் முடக்க நினைக்கின்றது என்பதையும் புரிந்துகொள்ளமுடிகின்றது.

எனவே அரசாங்கம் எத்தகைய தடைகளை ஏற்படுத்தினாலும், ஏற்கனவே கூறப்பட்டவாறு எமது கட்சித்தலைவர் சஜித் பிரேமதாஸவின் தலைமையில் நாளை மாபெரும் மக்கள் போராட்டத்தை நிச்சயமாக நடாத்துவோம்.

பெரும் எண்ணிக்கையானோரை ஒன்றுதிரட்டி கேட்போர் கூடத்தில் கட்சியொன்றின் சம்மேளனத்தை நடத்தியபோது ஏன் சுகாதாரப்பாதுகாப்பு வழிகாட்டல்கள் கருத்திற்கொள்ளப்படவில்லை? பிறிதொரு அரசியல் கட்சியால் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டம் ஏன் தடுக்கப்படவில்லை? ஆகவே, நாளை (செவ்வாய்க்கிழமை) கொழும்பு ஹைட்பார்க் மைதானத்தில் பெருமளவான மக்களைத் திரட்டி அரசாங்கத்துக்கு எதிரான போராட்டத்தை முன்னெடுப்போம். அதனைத் தடுத்துநிறுத்துவதற்கான அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு ஒருபோதும் அஞ்சமாட்டோம் என்று குறிப்பிட்டார்.

அவரைத்தொடர்ந்து கருத்து வெளியிட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன கூறியவை வருமாறு -

கொரோனா வைரஸ் பரவல் நெருக்கடி முடிவிற்குக் கொண்டுவரப்பட்டிருப்பதாகவே அரசாங்கம் கடந்த காலங்களில் கூறிவந்தது. ஆனால் எதிர்வரும் 16 ஆம் திகதி பாரிய மக்கள் போராட்டத்தை முன்னெடுப்பதற்கு நாம் திட்டமிட்டதையடுத்து, அரசாங்கத்துக்கு மீண்டும் கொரோனா வைரஸ் பரவல் நினைவிற்கு வந்திருக்கின்றது.

பொறுப்புள்ள எதிர்க்கட்சி என்றவகையில் மக்களை வீதிக்கு இறக்கவேண்டுமென நாம் எண்ணியதில்லை. ஆனால் நாடளாவிய ரீதியில் விவசாயிகள், ஆசிரியர்கள், வெவ்வேறு துறைசார்ந்தவர்கள் என அனைவரும் பல்வேறு நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்துள்ள நிலையில், அவர்களது பிரச்சினைகளை அரசாங்கத்துக்குக் கேட்கக்கூடிய விதத்தில் எடுத்துரைக்கவேண்டும் என்ற காரணத்தாலேயே 16 ஆம் திகதி பாரிய போராட்டத்துக்கு அழைப்புவிடுத்திருக்கின்றோம்.

அரசாங்கத்தின் செயற்பாடுகளால் மக்கள் பெரிதும் அதிருப்தியடைந்திருக்கின்றார்கள். எனவே, அவர்களின்மீது அடக்குமுறைகளைப் பிரயோகிப்பதொன்றே அரசாங்கத்தின் தெரிவாக இருக்கின்றது. ஆகையினாலேயே அனைத்து சிவில் கட்டமைப்புக்களுக்கும் அரசாங்கம் இராணுவ அதிகாரிகளை நியமிக்கின்றது.

இருப்பினும் அதன் அடக்குமுறைகளையும் தாண்டி இந்தியாவின் புதுடில்லி விவசாயிகளால் சுற்றிவளைக்கப்பட்டதைப்போன்று, நாம் எதிர்வரும் 16 ஆம் திகதி பெருந்தொகையான மக்களுடன் வந்து கொழும்பைச் சுற்றிவளைப்போம்.

ஆகவே, நாளை பிற்பகல் 2 மணிக்கு ஹைட்பார்க் மைதானத்திற்கு வருகைதருமாறு நாட்டுமக்கள் அனைவருக்கும் அழைப்புவிடுக்கின்றோம்.

அந்த மைதானத்துக்குள் நுழைவது தடைசெய்யப்படுமானால், ஒட்டுமொத்த கொழும்பு மாநகரத்தையும் ஹைட்பார்க் மைதானமாக மாற்றுவதற்கும் நாங்கள் தயாராக இருக்கின்றோம் என்று தெரிவித்தார்.

# தமிழ்பேசும் கட்சிகளை ஓரணியில் திரட்டுவதற்கு கூட்டமைப்புத் தலைவர் சம்பந்தன் முடிவு!

தமிழ் பேசும் கட்சிகளை ஒரு தளத்தில் அணி திரட்டுவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தீர்மானித்துள்ளார்.

புதிய அரசமைப்புக்கான வரைவொன்று இந்த ஆண்டு இறுதிக்குள் வரவுள்ளதாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவே கூறியுள்ள நிலையில் அதுபற்றி விசேட கரிசனை கொள்ளப்படவேண்டும் என இரா.சம்பந்தன் கூறியுள்ளார்.

மேலும் இந்தக் கலந்துரையாடலை சுமந்திரன் அமெரிக்காவிலிருந்து மீண்டும் நாடு திரும்பியதும் நடத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன எனவும் இரா.சம்பந்தன் பங்காளிக்கட்சிகளிடம் தெரிவித்துள்ளார்.

13 ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு வலியுறுத்த வடக்கில் உள்ள தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைந்து தீர்மானித்திருந்தன.

இந்தக் கூட்டத்தில் தமிழ் முற்போக்கு கூட்டணி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய கட்சிகள் பங்கேற்றபோதும் தமிழ்த் தேசியப் பரப்பில் முக்கிய கட்சிகளான இலங்கைத் தமிழரசுக் கட்சியும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் பங்கேற்றிருக்கவில்லை.


தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியைப் பொறுத்தவரையில் கொள்கை அளவில் ஒற்றையாட்சி அரசமைப்பில் காணப்படும் 13 ஆவது திருத்தச்சட்டத்தை ஏற்றுக்கொள்வதற்குத் தாம் தயாராக இல்லை என்று பகிரங்கமாக கூறியுள்ளது.

இந்நிலையில் 13 ஆவது திருத்தச்சட்டத்தை அமுலாக்கக் கோரும் செயற்பாட்டில் தாங்கள் பங்கேற்க முடியாது என்பதையும் அந்தக் கட்சி தர்க்க ரீதியாக நியாயப்படுத்தியுள்ளது.

இதேவேளை, சம்பந்தன் இந்தக் கூட்டத்தில் பங்கேற்பதற்கான ஏது நிலைமைகள் இன்மையால் கூட்டத்தைப் பிற்போடுமாறு இலங்கைத் தமிழரசுக்கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா கேட்டுக்கொண்ட போதும் அது நிராகரிக்கப்பட்டிருந்த நிலையில் தமிழ் பேசும் கட்சிகளை கூட்டமைப்பு சந்திக்க கூட்டமைப்பு தீர்மானித்துள்ளது.

## 40 - 50 கிலோ மீற்றர் வரை வேகத்தில் பலத்த காற்று

### மக்களுக்கு எச்சரிக்கை



நாடளாவிய ரீதியில் மணித்தியாலத்துக்கு 40 – 50 கிலோ மீற்றர் வரை அதிகரித்த வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதேநேரம், சப்ரகமுவ, வடமேல், மத்திய, வடக்கு மற்றும் மேல் மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் அவ்வப்போது மழை பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுவதாக அந்தத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

ஊவா மாகாணத்திலும் அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களிலும் சில இடங்களில் மாலையில் அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுவதாகவும் வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

## எரிபொருள் தட்டுப்பாடு நாட்டில் இல்லையாம் அமைச்சர் கம்மன்பில மீண்டும் அறிவிப்பு



இலங்கையில் எரிபொருள் தட்டுப்பாடு இல்லையென எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில மீண்டும் தெரிவித்துள்ளார்.

நீர்கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்தபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

எரிபொருள் விலை அதிகரிக்கப்படுமாயின் அது நிதியமைச்சின் ஊடாகவே முன்னெடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் கடந்த காலங்களிலும் விலை அதிகரிப்பு தொடர்பான விவரங்கள் மாத்திரமே தம்மால் வெளியிடப்பட்டன எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

## சிலோன் மசாலா தேயிலை 'சூ சாய்' என பெயர் மாற்றம்

சிலோன் மசாலா தேயிலையை 'சூ சாய்' என பெயர் மாற்றி மஸ்கட்டில் உள்ள ஓமான் தேசிய வங்கி அரங்கில் வைத்து அறிமுகப்படுத்தியுள்ளனர்.

இலங்கையில் உள்ள சூ குரூப் (பிரைவேட்) லிமிடெட்டின் தயாரிப்பான 'சூ சாய்' எனப் பெயரிடப்பட்டுள்ள சிலோன் மசாலா தேயிலை, ஆரோக்கியத்தை மேம்படுத்தும் 10 இற்கும் மேற்பட்ட இயற்கையான உயர்தர இலங்கை சுவையூட்டிகளைக் கொண்டுள்ளது. சிலோன் தேயிலையின் பிரீமியம் தரக் கலவையை உள்ளடக்கியுள்ளது. புதிய வர்த்தக நாமமான 'சூ சாய்' அறிமுகத்தின் போது, அதன் ஆரோக்கிய நன்மைகளை சூ குரூப் (பிரைவேட்) லிமிடெட்டின் முகாமைத்துவப் பணிப்பாளர் அபேவர்தன தெளிவுபடுத்தினார்.




# மெய்நிகர் வகுப்பறை

## Online Classroom

**ஜனனி தேவானந்த்**
(முதுநிலை விரிவுரையாளர் -
(தகவல் தொழில்நுட்பம்),
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

**மெய்நிகர் தனியார் வகுப்புக்கள்**

மெய்நிகர் கற்றல் தொடர்பான பல்வேறு திக்குகளில் தகவல்களை இந்தத் தொடர் வழங்கிவருகின்றது. இந்தச் சுழலில் தற்போது பல பெற்றோர்கள் மெய்நிகர் ரியுசன் பற்றிச் சிந்திப்பதைக் காணக்கூடியதாகவுள்ளது. அண்மையில் ஐ.பி.எல். கிரிகெட் போட்டி மற்றும் தற்போது நடந்துவரும் உலகக்கோப்பை கிரிகெட் போட்டிகளில் நேரலை ஒளிபரப்பின் போது அதிகளவு இந்திய விளம்பரங்கள் மெய்நிகர் தனியார் வகுப்புக்கள் பற்றியவையாகவிருந்தமையைக் காணமுடிந்தது. அந்த விளம்பரங்களைப் பார்க்கின்ற போது அதுவும் பிரபலமான ஹிந்தி நடிகர்கள் இந்த மெய்நிகர் தனியார் வகுப்புக்களையே பாடசாலைகளை விட மிக அற்புதமானவையாகச் சொல்லுகின்றமையைப் பார்க்கின்றபோது எமது பிள்ளைகளையும் அதில் சேர்த்தால் என்ன என்று பல பெற்றோர்கள் நினைக்கிறார்கள். அது பற்றி என்னிடமும் கேட்டார்கள். ஒரு நடிகர் விளம்பரமொன்றில் தோன்றி ரூ குட் ( too good) என்று சொல்வதால் அது உண்மையில் நல்லதா? அது தொடர்பான சேவைகள் இலங்கையில் உள்ளனவா? அதில் பிள்ளைகளை இணைக்கலாமா? அதன் பயன் தான் என்ன? என்று சிந்திப்பதை அவதானிக்கின்ற போது அது பற்றி இந்தத் தொடரில் பேசுவது பொருத்தமென்றே நினைக்கிறேன்.

மெய்நிகர் சூழலால் கல்வி பாரம்பரிய கற்பித்தல் முறைகளிலிருந்து விலகிச்சென்று கொண்டிருக்கிறது. இன்றைய நவீன கற்றல் சூழல், அதாவது கற்பதற்காகத் தொழில்நுட்பம் தனது பரந்த சிறகுகளைத் திறந்துவிட்ட நிலையில், தொழில்நுட்பம் மற்றும் கல்வி ஆகியவை கற்பித்தல் – கற்றல் செயல்முறையை மாற்றும் வகையில் குறுக்கிடுகின்றன. விரிவுரை இடத்தில் அமர்வது அல்லது வகுப்பறையில் அமர்வது பரவலாக மெய்நிகர் தளங்களால் மாற்றப்படுகிறது. அதே வேளை கல்வி பெருவணிகமாக உருவெடுப்பதற்கான வாய்ப்புக்களையும் அதிகரித்திருப்பதை அவதானிக்கலாம். அதாவது கல்வி வணிகப்போட்டி உச்சத்தில் இருக்கும் தற்போதைய சூழ்நிலையில், பெரும்பாலான பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளைப் பல்வேறு கருத்தாக்கங்களின் வலுவான அடித்தளத்தை நிறுவுவதற்காக கல்வியில் சேர்க்கின்றனர். ஆனால் பாடசாலைகளின் பரபரப்பான கால அட்டவணையில் கலந்துகொண்ட பிறகு, டியுசன் வகுப்புகளில் கலந்துகொள்வது மிகவும் சோர்வாக இருக்கும், இருந்தாலும், தொழில்நுட்பப் புரட்சி கல்வித் துறையில் புயலைக் கிளப்பியுள்ளது. புதிய ரியுசன் கலாச்சாரம் ஆரம்பமாகி வேகமெடுக்கிறது. இந்தக் கற்றலுக்கான செயலிகளில் எதை தெரிவு செய்வது என்பதுதான் இன்று பெற்றோர் முன் உள்ள சவால் எனலாம்.

எதையாவது வாங்குவது மிகவும் எளிதானது, ஆனால் எதை வாங்குவது என்பதைத் தேர்ந்தெடுப்பது மிகவும் கடினம். இணையவழிக் கற்றலுக்கு பல செயலிகள் விளம்பரப்படுத்தப்படும் போது எது சிறந்தது? எதனடிப்படையில் தேர்வு செய்வது? – என்பது சிரமமானதாகவுள்ளது. ஆகவே இங்கு கவனத்தில் கொள்ள வேண்டியது இணையவழிக் கற்றல் பயன்பாட்டை பணம்கொடுத்து வாங்கும் முன் பல விடயங்களைக் கருத்தில் கொள்ள வேண்டும். அதற்கென அளவுருக்கள் நிறைய உள்ளன.

இதற்கு முன் இணையவழி தனியார் கல்வி என்றால் என்ன என்பதைப் பற்றிய எண்ணங்களில் முதலில் தெளிவு பெறலாம்.

இணையவழி தனியார் கல்வி என்பது ஒருவருக்கு ஒருவர் கற்பித்தல் - கற்றல் செயல்முறையாகும், அங்கு ஒரு மாணவரும் ஆசிரியரும் உடல் ரீதியாக இருக்க வேண்டிய அவசியமில்லை. நேரம் மற்றும் இருப்பிடம் என்ற கட்டுப்பாடு இல்லாததால் இருவரும் எந்த நேரத்திலும், எந்த இடத்திலும் தொடர்பு கொள்ளலாம். ஆன்லைன் பயிற்சி நேரடி ஸ்ட்ரீமிங் வீடியோக்களைப் பயன்படுத்துகிறது மற்றும் சுண்ணாம்பு வெண்கட்டிகளைத் தவிர்க்கிறது. ஆனால் இலங்கை வடபுலத்தைப் பொறுத்தமட்டில் தனியார் வகுப்புக்கள் வெண்கட்டிகளால் எழுதுவதை வீடியோ ஸ்ட்ரீமிங் செய்கின்றன. இது சற்று விநோதமானது. மெய்நிகர் தனியார் வகுப்புக்களின் பண்புகளுக்கு ஒவ்வாதது. அது பற்றிப் பின்னர் விரிவாகப் பார்க்கலாம்.

இணையவழிக் கற்றலில் தொலைதூரக் கற்றல் வடிவமைப்பைப் பயன்படுத்தி மாணவர்களுக்கு கற்பிப்பவர் அல்லது முக்கிய பயிற்றுவிப்பாளர் ஆன்லைன் ஆசிரியர் ஆவார். அவர் உலகம் முழுவதும் வலுவான இணைய இணைப்புடன் கூடிய கணினி அமைப்பின் முன் அமர்ந்து பயிற்சி அளிக்கிறார். அதற்காக பல்வேறு செயலிகளும் பலவேறு வசதிகளில் வடிமைக்கப்பட்டுள்ளன. அதற்கேற்ப பாடத்திட்டமும் மாற்றியமைக்கப்பட்டிருக்கிறது. மெய்நிகர் தனியார் வகுப்புக்கள் எதிர்காலத்தில் மிகவேகமாக ஆதிக்கம் செலுத்தப்போகின்றன. ஏனெனில் அதன் பல்வேறு பண்புக்கூறுகள் அதன் வேகத்திற்கு துணை நிற்கப் போகின்றன.

**1. நெகிழ்வுத்தன்மை**

இணையவழிப் பயிற்சியின் முதன்மை நன்மை அதன் நெகிழ்வுத்தன்மை. ஒரு நபர் தனக்கு மிகவும் பொருத்தமான நேரத்தில் படிக்க சுதந்திரம் உள்ளது. ஒரு ஆசிரியர் பயணம் செய்தாலும் அல்லது வெளியூர் சென்றாலும், விடுதியில் தங்கியிருந்தாலும், அவர் மாணவருடன் எளிதாகத் தொடர்பு கொள்ள முடியும். இங்கு தேவையானது மடிக்கணினி அல்லது டிஜிற்றல் சாதனம் மட்டுமே. அனைத்து கோப்புகள், வீட்டுப்பாடம், பணிகள் போன்றவற்றை எந்த தடையும் இல்லாமல் மெய்நிகர் வெளியில் எளிதாக அனுப்பலாம். அனைத்து முக்கிய விவாதங்கள், கருத்துகள் எளிதாக நடத்தப்படும். மேலும், பொதுப் போக்குவரத்துச் சேவைகள் உடனடியாகக் கிடைக்காத அதிகாலை அல்லது இரவு தாமதம் போன்ற ஒற்றைப்படை நேரங்களில் மாணவர்களும் ஆசிரியர்களும் ஒருவருக்கொருவர் தொடர்பு கொள்ளலாம்.

**2. பரீட்சைகளின் பாரம்பரியத் தன்மை நீக்கப்படுகின்றது.**

பாரம்பரிய முறையில் தேர்வு செய்யப்படுவதைப் போலன்றி, இணையவழிப் படிப்பில் சேரும்போது, பரீட்சை முடிவை அறிய நாள்கள் காத்திருக்க வேண்டியதில்லை. இங்கு பரீட்சை முடித்த தருணத்தில் முடிவுகள் அறிவிக்கப்படும். மாணவர்கள் தாங்கள் சிறப்பாகச் செயல்பட்ட இடத்தை தாமே பார்க்கலாம் அல்லது முன்னேற்றம் தேவைப்படும் இடங்களில் தங்கள் செயல்திறனை எளிதாகச் சரிபார்க்கலாம். எழுதப்பட்ட அல்லது வீடியோ படிவத்தில் கருத்துகளை வழங்கலாம்.

**3. மன அழுத்தத்தைக் குறைக்கிறது.**

இணையவழிப் பயிற்சியானது நேரஅழுத்தத்தைக் குறைக்கிறது. இது மாணவர்களின் படிப்புச் சுமை மற்றும் நாளாந்த வாழ்க்கைக்கும் இடையே ஆரோக்கியமான சமநிலையை பராமரிக்க உதவுகிறது. மாணவர்கள் கூட தங்கள் அன்புக்குரியவர்களுடன் நேரத்தை செலவிட போதுமான நேரம் கிடைக்கும். வாரநாள்களில் பயணம் செய்யாமல் இருப்பதன் மூலம் நிறைய நேரம் மிச்சமாகும். நேரத்தை ஓய்வு நேர நடவடிக்கைகளில் எளிதாக முதலீடு செய்யலாம் அல்லது குடும்ப உறுப்பினர்களுடன் சேர்ந்து மகிழலாம்.

**4. கற்ப்பித்தல் வளங்கள் இலகுவாகக் கிடைக்கின்றன.**

வீட்டில் இருந்தபடியே மாணவர்கள் அனைத்து குறிப்புகள் மற்றும் பிற கற்றல் மூலங்களை வசதியாக அணுகலாம். அவை மாணவர்கள் கருத்தை தெளிவாகப் புரிந்து கொள்ளவும், தலைப்புகளின் தர்க்கத்தை தக்கவைக்கவும் உதவுகின்றன. மாணவர்களும் ஆசிரியர்களும் டியுசன் வகுப்பிற்குச் செல்லும் போது புத்தகங்கள் மற்றும் பிற படிப்புப் பொருள்களைச் சுமக்கும் சுமையிலிருந்து விடுபடுகிறார்கள். முழு அளவிலான இணையவழி ஆதாரங்களுக்கான அணுகல் கூட எளிதாகிறது. கணித ஆன்லைன் பயிற்சியின் போது, ஒரு ஆசிரியர் ஒரு குறிப்பிட்ட சூத்திரத்தைச் சரிபார்க்க புத்தகங்களைத் தேடுவதற்குப் பதிலாக, அவர் கூகிள் தேடல் மூலம் சூத்திரத்தை அணுகலாம். அறிவியல் பயிற்சியின் போது, யுடியுப் வீடியோக்களில் இருந்து சிறிய வீடியோக்களைக் காண்பிப்பதும் மாணவர்கள் கருத்தை எளிதில் புரிந்துகொள்ள உதவுகிறது.

**5. பழக்கமான சூழலிலிருந்து கற்க்க வழிவகுகின்றது.**

ஆன்லைன் பயிற்றுவிப்பு மாணவர்களை அவர்களின் பழக்கமான சூழலில் இருந்து வகுப்புகளில் கலந்துகொள்ள அனுமதிக்கிறது, இது கற்றலில் அவர்களின் ஈடுபாடு மற்றும் பங்கேற்பு அளவை மேம்படுத்துகிறது. அவர்கள் கேள்விகளை எழுப்ப வெட்கப்படுவதில்லை. மறுபுறம், ஆசிரியர்கள் பொறுமையை இழக்க மாட்டார்கள் அல்லது அவர்களின் கோபம் மாணவர்களை நேரடியாக பாதிக்காது. அவர்கள் உட்கார்ந்து அமைதியாக கற்பிக்க முடியும். சுண்ணாம்பு மற்றும் டஸ்டரைப் பயன்படுதத் தேவையில்லை, ஆசிரியர் கற்பிக்கும் போது நீண்ட நேரம் நிற்க வேண்டிய அவசியமில்லை. சுற்றியுள்ள பழக்கமான சூழல்கள் குறிப்பிடத்தக்க மற்றும் நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துகின்றன, இது அர்த்தமுள்ள கற்றலை ஊக்குவிக்க உதவும்.

**6. நீண்ட விரிவுரைகளுக்குப் பதிலாக, குறுகிய வரிவுரைகளை ஒழுங்கமைக்கலாம்.**

பாரம்பரிய கல்வி வகுப்புகள் பொதுவாக நீண்டதாக இருக்கும், ஏனெனில் ஒவ்வொரு வகுப்பிலும் ஆசிரியர் குறைந்தது ஒன்று அல்லது இரண்டு தலைப்புகளை முடிக்க வேண்டும். சில நேரங்களில், இது ஒரு மாணவருக்கு மிகவும் சுமையாக மாறும். அடுத்த அமர்வில் ஆசிரியர் அடுத்த தலைப்பிற்குச் செல்வதற்கு முன், அவர் கருத்தைப் பிடிக்க வேண்டிய அழுத்தத்திற்கு ஆளாகிறார். இருப்பினும், இணையவழி வகுப்புகளுடன் ஆசிரியர்களும் மாணவர்களும் சேர்ந்து நீண்ட வகுப்பை சிறிய அமர்வுகளாக உடைக்கலாம். ஒரே நேரத்தில் தலைப்பில் கவனம் செலுத்துவதற்குப் பதிலாக, ஆசிரியர்கள் ஒரு நாளுக்குள் குறுகிய டுடோரியல்களில் தலைப்புகளை விளக்கலாம். இது ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் இருவரும் தங்களை இலகுவாக்கிக் கொள்ளவும், குறிப்பிடத்தக்க கற்பித்தல்-கற்றல் செயல்முறையை வெளிக்கொணரவும் உதவுகிறது.

**7. நிபுணத்துவத்திற்கான அணுகல்**

இணையவழி கல்வி வகுப்புகள் புவியியல் இருப்பிடங்களை அடிப்படையாகக் கொண்டவை அல்ல. அமெரிக்காவில் அமர்ந்திருக்கும் ஒருவர் ஆஸ்திரேலியாவில் அமர்ந்திருக்கும் ஆசிரியரிடம் இருந்து கற்றலைப் பெறலாம். ஒரு மாணவர் உலகெங்கிலும் உள்ள மிகவும் அறிவார்ந்த ஆசிரியரிடமிருந்து கற்றுக்கொள்ள விரும்பினால், அவர் அந்த நபருடன் மெய்நிகர் பயன்முறையின் மூலம் இணைக்க முடியும். இன்று உலகம் முழுவதும் தனது அறிவை வழங்குவதன் மூலம் ஆசிரியர்கள் தங்கள் வருவாயை அதிகரிக்க அதிக வாய்ப்புகளைப் பெறுகிறார்கள். ஆன்லைன் பயிற்சியானது மக்கள் தொகையில் பெரும் பகுதியினருக்கு முன்பை விட பரந்த வாய்ப்பை வழங்கும்.

(10ஆம் பக்கம் பார்க்க)

# தமிழர் நினைவு நாளை ஒரு மதத்தவர்கள் தீர்மானிப்பதை எப்படி அனுமதிக்கலாம்?

## கேள்வி எழுப்புகின்றார் கலாநிதி ஆறு. திருமுருகன்



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், நவம்பர்14

தமிழர்களின் நினைவு நாளை – பிரார்த்தனை நாளை – ஒரு மதத்தவர்கள் எவ்வாறு தனித்துத் தீர்மானிக்க முடியும் என துர்க்காதேவி தேவஸ்தானத்தில் தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் கேள்வி எழுப்பியுள்ளார்.

அளவையூர் தத்துவஞானி கைலாசபதி அரங்கில் இன்று இடம்பெற்ற யாழ். மாவட்ட ஓய்வுநிலை அரசாங்க அதிபர் நாகலிங்கம் வேதநாயகத்தின் சேவை நயப்பு விழாவில் கலந்துகொண்டு ஆசியுரை வழங்கும் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இந்து மக்களும் கிறிஸ்தவர்களும் மிகவும் ஒற்றுமையாகச் செயற்பட்டவர் கள். நாங்கள் படிக்கின்ற காலத்தில் கிறிஸ்தவ நண்பர்களோடு சேர்ந்து பழகி, ஒற்றுமையாக வாழ்ந்து வருகிறோம். நான் துர்க்கா தேவி தேவஸ்தானத் தின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட போது என்னை முதன்முதலில் நேரடியாக வந்து வாழ்த்தியவர் தற்போது யாழ் .மாவட்ட ஆயராக உள்ள ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்கள். அவ்வாறு நாங்கள் இந்துக்களும் கிறிஸ்தவர்களும் மிகவும் ஒற்றுமையாக வாழ்ந்து வரு கின்றோம். ஆனால் தற்போது ஒரு பிரச் சினை எழுந்துள்ளது.

கிறிஸ்தவ மதத்தில் பல சபைகளை உருவாக்கித் தமது மதத்துக்கு மதம் மாற்றும் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றார்கள். வறிய நிலையிலுள்ள மக்களுக்குப் பணத்தைக் கொடுத்து மத மாற்றம் செய்வதை முன்னெடுக்கிறாா்கள். அது ஏற்கக்கூடிய ஒருவிடயமல்ல.

தமிழர்களின் அதிகமானோர் கண் ணீரோடு நிற்க கிறிஸ்தவர்களோ அதிக சபைகள் உருவாக்கி, பணத்தோடு செல்கின்றனர்.

ஆனால் நாம் எந்தக் காலத்திலும் எந்த கிறிஸ்தவர்களது வீட்டிற்கோ, இஸ் லாமியரது வீட்டிற்கோ சென்று சைவ சமயத்துக்கு வாருங்கள் என அழைக்கவில்லை. ஆனால் தற்போது இந்துக் களை இஸ்லாமியர்களும் குறி வைக் கின்றனர். அதனைப் பத்திரிகையில வரும் பெயர் மாற்றங்களே உறுதி செய்யும். அதற்கும் அப்பால் கிறிஸ்தவர்கள் வீடு வீடாகச் சென்று சமயத்துக்கு ஆள் சேர்க்கும் பணியையும் மேற்கொள் கின்றனர் என்பதனையும் ஏற்கவேண்டும். நாங்கள் இந்துக்கள் எப்போதாவது எமது மதத்திற்கு மதம் மாறவேண்டும் என்று எங்காவது கேட்டிருக்கின்றோமா? நாங்கள் கேட்க ட்டோம்.

அதேபோலவே ஒட்டுமொத்த தமிழர்களின் திரு நாளை ஏனைய மதத்தவர் களை புறந்தள்ளி விட்டு ஒரு மதத்தவர்கள் மாத்திரம் எவ்வாறு தீர்மானிக்க முடியும்?

ஏனைய மதத்தவர்களோடு கலந்து ரையாடாது ஒரு மதத்தவர்கள் மாத்திரம் எடுத்த முடிவினை ஏனையவர்கள் ஏற்றுக் கொள்வார்களா?

தமிழர்களின் திருநாளை தமிழர்களில் எண்பது வீத மானவர்களை ஓரம் கட்டி எஞ்சிய இருபது வீதமானோரைக் கொண்டுள்ள ஒரு மதத்தவர்கள் மட்டும் பொது நிலைப் பாடாகத் தீர்மானித்தமையினை எவ்வாறு ஏற்பது?

தமிழர்கள் திருநாளாக – நினைவு நாளாக – கடைப்பிடிக்கும் ஒரு தினத்தை, மாற்றி அமைக்கும் முடிவைக் கூட நீங்கள் தனித்து எடுத்து அறிவித்தால் நாம் எவ்வாறு ஏற்றுக்கொள்வது. ஏன் ஏனைய மதத்தவர்களோடு கலந்துரை யாடவில்லை?

இவ்வாறு பல விடயங்களை நேரடி யாகவே கூற லாம். சைவ சமயத்தவர் களிறகும் பிரச்சினை எழுகின்றது என்பதனை ஏற்க வேண்டும்.

இந்துக்கள் கிறிஸ்தவ மக்களுக்கோ, கிறிஸ்தவ துறவிகளுக்கோ எதிரானவர் களல்லர். நாங்கள் ஒற்றுமையாகச் செயற்பட்டு வருகின்றோம். இந்துக்களா கிய நாம் எந்த மதத்தவர்களோடும் சண்டை பிடிக்கப் போவதில்லை. ஆனால் நமக்கு ஒரு தாக்கம் ஏற்படும் போது அதனைப் பார்த்துக் கொண்டிருக்க முடியாதுதானே. – எனவும் தெரிவித்தார்.

## மெய்நிகர் வகுப்பறை

(09ஆம் பக்கத் தொடர்ச்சி)

**8. அதிக கல்வி சுதந்திரம்**

இணையவழி வகுப்பு மாணவர்களுக்கு கற்றலுக்கான அதிக சுதந்திரத்தை தருகிறது. அவை ஆசிரியர்களில் முழுமையாகச் சார்ந்து இல்லை. ஆசிரியர்கள் வழிகாட்டிகளாகவே இருக்கிறார்கள். இணையவழி வகுப்புகளில் மாணவர்கள் கலந்துகொள்ளும் போது, ஆழமான புரிதலை வளர்த்துக் கொள்ள அதே தலைப்பைப் பற்றி மேலும் தேட ஆர்வப்படுகிறார்கள் அல்லது தலைப்புகளைப் பற்றி அறிந்துகொள்ள இணையத்தில் உலாவுகிறார்கள். இது விடயப்பரப்புக்கள் பற்றிய சுதந்திரமான கற்றலுக்கும் மேலும் அறிதலுக்கும் வாய்ப்பை வழங்குகிறது.

**9. குறைந்த செலவு**

இணையவழி பயிற்சிகள் மூலம், பயண நேரம் நீக்கப்படும், இது இறுதியில் செலவு சேமிப்புக்கு வழி வகுக்கிறது. அதாவது இணையவழி கல்வியானது செலவுகளைச் சேமிக்க உதவுவது மட்டுமல்லாமல், நேரத்தைச் சேமிக்கவும் உதவுகிறது. வேலைகளை இணையவழி சமர்ப்பிக்க முடியும் என்பதால் நிறைய காகிதங்கள் கூட சேமிக்கப்படுகின்றன. இணையவழி வகுப்பில் கலந்து கொள்ளும் போது குறிப்புகளை கூட 'வேர்ட் டாகு மெண்ட்' அல்லது 'நோட் பாட்'டில் அருகருகே எளிதாகத் தயாரிக்கலாம்.

**10. ஆரோக்கியமான உளவியலை வழங்குகிறது**

இணையவழி பயிற்சி மாணவர்களுக்கு கூடுதல் ஆராய்ச்சி மற்றும் புதிய சவால்களைக் கொண்டுவருகிறது. இது அவர்களின் தொழில்நுட்ப அறிவை மேம்படுத்த உதவுகிறது மற்றும் வகுப்பின் இணையவழி ஸ்ட்ரீமிங்கை சுயாதீனமாக கையாள முயற்சிக்கிறார்கள். குழந்தைகள் கற்க அழுத்தம் கொடுக்கப்படுவதில்லை. இது ஒரு குழந்தையின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு பங்களிக்கிறது, கல்வி ரீதியாகவும் உளவியல் ரீதியாகவும் சிறந்த எதிர்காலத்தை உருவாக்க உதவுமென்கிறார்கள்.

மேலே சொன்ன பண்புகள் தனியார் மெய்நிகர் வகுப்புக்களை எதிர்காலத்தில் அதிகரிக்குமெனலாம். அதற்கேற்ப தொழில்நுட்பத்தின் முக்கியத்துவம் மேலும் மேலும் மாணவர்களை திறமையாக சென்றடையும் திறனை மேம்படுத்துகிறது. இணையவழி பயிற்றுவிப்பு என்பது மாணவர்களின் கற்றலை மிகவும் வசதியான மற்றும் ஊடாடும் முறையில் மேம்படுத்த உதவும் ஒரு புதிய மற்றும் சிறந்த பயிற்சி முறையாகும். இதனால் மெய்நிகர் தனியார் வகுப்பக்கள் எதிர்காலக் கல்வியில் ஒரு புயலாக வரப்போகிறது. அதனை எப்படி அணுகுவது என்பதை அடுத்த தொடரில் பார்க்கலாம்.

(தொடரும்)

## ரி20 உலகக்கிண்ண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இறுதிப் போட்டி நேற்று டுபாயில் ஆஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து அணிகளுக்கு இடையில் இடம்பெற்றது.

நாணய சுழற்சியில் வெற்றிப் பெற்ற ஆஸி அணி முதலில் துடுப்பெடுத்தாட நியூசிலாந்து அணிக்கு அழைப்பு விடுத்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுக்களை இழந்து 172 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

அவ்வணி சார்பில் அதிரடியாக துடுப்பெடுத்தாடிய அணித்தலைவர் கேன் வில்லியம்சன் 85 ஓட்டங்களை அதிகபட்சமாக பெற்றுக் கொண்டார்.

பந்து வீச்சில் ஹேசில்வுட் அதிகபட்சமாக மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஆஸி அணி 18.5 ஓவர்களில் 2 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து 173 ஓட்டங்களைப் பெற்று வெற்றி கிண்ணத்தை தனதாக்கியது.ஆஸி அணி சார்பில் இறுதி வரை ஆட்டமிழக் காமல் அதிரடியாக துடுப்பெடுத்தாடிய மிட்சல் மார்ஸ் 77 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார். 6 நான்கு ஓட்டங்கள் மற்றும் 4 ஆறு ஓட்டங்கள் அடங்கலாக அவர் இந்த ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார். டேவிட் வோர்னர் 53 ஓட்டங்களையும், கிளேன் மெக்ஸ்வல் ஆட்டமிழக்காமல் 28 ஓட்டங்களையும் பெற்று வெற்றிக்கு வித்திட்டனர். பந்து வீச்சில் நியூசிலாந்து அணி பந்துவீச்சாளர் எவரும் பிரகாசிக்காத நிலையில் ட்ரன்ட் போல்ட் மாத்திரம் 2 விக்கெட்டுக்களை கைப்பற்றினார். ரி20 உலகக்கிண்ண வரலாற்றில் அவுஸ்திரேலியா அணி தனது முதல் கிண்ணத்தை கைப்பற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஒரே நாளில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கவலை வெளியிடப்பட்டுள்ளது.

கொரோனாத் தொற்றுக்குள்ளான மேலும் 23 பேர் இலங்கையில் ஒரே நாளில் – நேற்று முன்தினம் சனியன்று – உயிரிழந்துள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத் தகவல் திணைக்களம் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

இதன் அடிப்படையில் இலங்கையில் இதுவரையில் கொரோனாவால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 13 ஆயிரத்து 995 ஆக அதிகரித்துள்ளது.

## வவுனியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தெரிவித்துள்ளனர்.

வவுனியா, கோவில்புதுக்குளம் பகுதியைச் சேர்ந்த 94 வயது பெண் ஒருவரே தொற்றுக்கு உள்ளாகிய நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

அப்பெண்ணின் பூதவுடலை சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி பூந்தோட்டம் பகுதியில் உள்ள மின் மாயானத்தில் தகனம் செய்வதற்குரிய நடவடிக்கைகளை சுகாதாரப் பிரிவினர் முன்னெடுத்துள்ளனர்.

## சுமந்திரன் குழு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அமெரிக்க நேரப்படி இன்று திங்கட்கிழமை காலை முதல் ஐந்து வெவ்வெறு சந்திப்புக்களில் இந்தக் குழுவினர் பங்குபற்றவுள்ளனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகள் குழுவில் ஜனாதிபதி சட்டத்தரணிகள் எம்.ஏ.சுமந்திரன், கனகேஸ்வரன், சட்ட அறிஞர் திருமதி நிர்மலா சந்திரஹாசன் ஆகியோர் இடம்பெற்றிருக்கின்றமை தெரிந்ததே.

இதுவரை காலமும் உலகத் தமிழர் பேரவையின் சார்பில் சுமந்திரனுடன் இணைந்து பணியாற்றிய பிரதிநிதிகள் இந்தச் சந்திப்புகளில் பேரவையின் சார்பில் பங்கு பற்றுகின்றனர் எனத் தெரிகின்றது.

தற்போது யாழ்ப்பாணத்தில் தங்கியிருக்கும் முன்னாள் யாழ்.குரு முதல்வர் வண.இமானுவேல் அடிகள் உலகத் தமிழர் பேரவையின் தலைவராக நீண்ட காலம் செயற்பட்டவர் என்பது தெரிந்ததே.

அந்த அமைப்பின் சார்பில் ஆஸ்திரேலியாவில் இருந்து கலாநிதி கண்ணப்பர் முகுந்தன் (பொறியியலாளர்), பவகுணன் (லண்டன் மற்றும் இந்தியா), சட்டத்தரணி வாணி செல்வராஜா (கனடா) ஆகியோரும், அமெரிக்காவில் இயங்கும் மற்றைய இரு செயற்பாட்டாளர்களும் இந்தப் பேச்சுகளுக்காக அமெரிக்க இராஜாங்க அமைச்சினால் அழைக்கப்பட்டுள்ளனர்.

அமெரிக்க இராஜாங்க அமைச்சின் அழைப்பின் பேரில் வொஷிங்டன் சென்றுள்ள தமிழ்க் கூட்டமைப்பின் பிரதிநிதிகள் மூவரும் வொஷிங்டன் தேசிய விமான நிலையத்துக்கு அருகில் 'ஹில்டன் கார்டன் இன்' ஹோட்டலில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இன்று திங்கட்கிழமை காலை 10 மணி முதல் மாலை 4.30 மணி வரை இக்குழுவினருக்கு ஐந்து சந்திப்புகள் உள்ளன. உலகத் தமிழர் பேரவையின் உறுப்பினர்களும் இதே நேரம் சந்திப்புக்கு அழைக்கப்பட்டிருக்கின்றனர் என அறிய வந்தது.

அமெரிக்க இராஜாங்க அமைச்சில் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான உதவிச் செயலாளர் மட்டத்தில் முதல் சுற்றுப் பேச்சுகள் நடக்கவிருக்கின்றன எனத் தெரிகின்றது. இறுதிக் கட்டத்தில் அதற்கு மேல் உள்ள இராஜாங்க அமைச்சின் பிரமுகர்களுடனும் கலந்துரையாடல் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கை விவகாரங்களில் ஏற்கனவே அதிகம் பரிச்சயமுள்ள – இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவராக முன்னர் பணியாற்றிய – றொபேர்ட் ஓ பிளேக்குடனும் ஒரு சந்திப்பு இடம்பெற விருக்கின்றது.

அமெரிக்காவின் சார்பில் சர்வதேச யுத்தக் குற்ற விடயங்களைக் கையாளும் விசேட தூதுவராக ஸ்டீபன் ராவ்ப் இருந்தார். அந்தப் பதவி இப்போது 'உலகளாவிய குற்றவியல் நீதிக்கான அமெரிக்கத் தூதுவர்' (United States Ambassador at - Large for Global Criminal Justice) என அழைக்கப்படுகின்றது. இப்போது அப்பதவியில் பதில் நிலையில் கடமையாற்றுபவர் மைக்கல் கொஸாக். அவருடனும் தமிழ்த் தரப்பினர் இம்முறை விரிவான பேச்சுகளில் ஈடுபடவுள்ளனர். இந்தப் பதவி நிலையும் அமெரிக்க இராஜாங்க அமைச்சின் உதவிச் செயலாளர் மட்டத்திலானது என்பது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்காவின் 'வெளிவிவகார அமைச்சரை' 'இராஜாங்கச் செயலாளர்' (Secretary of State) என அழைப்பர். இந்த வரிசையில் இராஜாங்க உதவிச் செயலாளர் மட்டத்தில் கூட்டமைப்பு மற்றும் உலகத் தமிழர் பேரவையின் பிரதிநிதிகள் முதல் சுற்றுப் பேச்சுக்களில் ஈடுபடவிருக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

# தற்போதைய ஊழல்வாதிகளுடன் இணைந்து கடமையாற்ற முடியாததால் ஓய்வு பெற்றேன்!

## அரச அதிகாரிகள் மக்களுக்கு சேவையாற்றுபவர்களே; அரசியல்வாதிகள் சொல்வதை செய்பவர்கள் அல்லர்!

### முன்னாள் அரச அதிபர் வேதநாயகம் ஆவேசப் பேச்சு

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், நவ.15

அரச அதிகாரிகள் மக்களுக்குச் சேவையாற்றவே நியமிக்கப்பட்டவர்கள். அரசியல்வாதிகள் சொல்வதைச் செய்பவர்கள் அல்லர் என யாழ்.மாவட்ட முன்னாள் அரசாங்க அதிபர் நாகலிங்கம் வேதநாயகன் தெரிவித்தார்.

அளவையூர் தத்துவஞானி கைலாசபதி அரங்கில் இடம்பெற்ற தனது சேவை நயப்பு விழாவில் கலந்து உரையாற்றும் போது மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நான் இன்று ஓய்வு பெற்று இருக்கின்றேன். நான் இன்று நேர்மையான அதிகாரி என எல்லோராலும் பேசப்படுவதற்குக் காரணம் என் தந்தை மற்றும் என்னைக் கற்பித்து வழிநடத்திய ஆசிரியர்கள் போன்றோரே. குறிப்பாக யாழ் மாவட்ட அரசாங்க அதிபராக இருந்த காலத்தில் என்னுடன் பல நேர்மையான அரச உத்தியோகத்தர்கள் இணைந்து பணியாற்றியதன் காரணமாக ஒரு குழு அணியாக நாங்கள் கடமையாற்றியிருந்தோம். அதன் காரணமாக பெருமளவு நிதியைப் பெற்று யாழ்.மாவட்டத்தில் பல்வேறுபட்ட அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொண்டிருந்தோம்.

குறிப்பாக வலி வடக்குப் பிரதேசத்தில் பல்வேறுபட்ட அபிவிருத்தி திட்டங்களை நாங்கள் மேற்கொள்ளக் கூடியதாக இருந்தது. குறிப்பாக மீள்குடியேற்றப்பட்ட இடங்களில் பல்வேறுபட்ட அபிவிருத்தி திட்டங்களை நாங்கள் செயற்படுத்தினோம். ஏழை மக்களுக்கு உதவி செய்வதற்கு சுற்று நிருபங்கள் கூட தவறாக இருந்தால் அவற்றை மாற்றி அமைத்துச் செயற்படுத்த முடியும். எனவே, அரச சேவையிலுள்ளோர் ஏழை மக்களுக்குக் கட்டாயமாக உதவ முன்வர வேண்டும். அத்தோடு அன்பாகப் பழகி சேவையாற்ற வேண்டும். அன்பு தான் என்றும் நிலைத்திருக்கும். குறிப்பாக அரசியல்வாதிகளின் சொல்லைக் கேட்டு செயற்படுத்தும் அதிகாரியாக இல்லாது பொதுமக்களுக்கு, பொது மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் அரச உத்தியோகத்தர்களாகவே செயற்பட வேண்டும். நான் என்னுடன் பணியாற்றிய இளம் உத்தியோகத்தர்களுக்கு கூறுகின்றமை அதைத்தான்.

அன்பால் எதையும் சாதிக்க முடியும் என தற்போது பலரும் கூறுகின்றார்கள். 65 வரை ஓய்வு காலம் அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் எனக்கு தெரியும் நான் இந்தக் கால கட்டத்தில் என்னால் கடமையாற்ற முடியாது. நான் நேர்மையாகக் கடமையாற்றியதன் காரணமாக தற்போதைய ஊழல்வாதிகளுடன் இணைந்து என்னால் கடமையாற்ற முடியாது. அதன் காரணமாகவே என்னை வேறு இடங்களுக்கு மாற்ற முயற்சித்தார்கள். எனினும் நான் ஓய்வைப் பெற்றுக்கொண்டேன்.

நான் கடமையாற்றிய காலத்தில் எந்த ஓர் அரசியல்வாதிக்கும் முன்னுரிமை கொடுத்துச் செற்பட்டவனல்லன். அது அனைவரும் அறிந்ததே. அனைவருக்கும் சமனாகவே ஆகவேண்டி நான் செயற்பட்டேன். அத்தோடு சிலர் பிழையான பய விடயங்களைச் செய்யச் சொல்லி கூறுவார்கள். நான் கூறுவேன் அவ்வாறு செய்ய முடியாது என. எனவே, தற்போதுள்ள நிலையில் சில பிழையான விடயங்களை செய்யத் தூண்டியவர்களுடன் என்னால் கடமையாற்ற முடியாது. அத்தோடு அ, ஆ கூறுபவற்றை எல்லாம் செயற்படுத்த முடியாது. நாம் நேர்மையாக கடமை புரியும் போது யாருக்கும் பயப்படத் தேவையில்லை அதுதான் உண்மை. - என்றார்.




## தமிழர் புனர்வாழ்வு போன்ற அரசசார்பற்ற நிதியம் வேதனாயகன் தலைமையில் உருவாகவேண்டும்!

### யாழ்.பல்கலை விரிவுரையாளர் சர்வேஸ்வரா கோரிக்கை

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், நவ.15

ஓய்வு நிலை அரச அதிபர் வேதநாயகன் தலைமையில், தமிழர் புனர்வாழ்வு போன்ற அரச சார்பற்ற நிதியம் ஒன்று உருவாக்கப் படவேண்டுமென யாழ்.பல்கலைக்கழக கல்வியியற் துறை விரிவுரையாளர் இ.சர்வேஸ்வரா தெரிவித்துள்ளார்.

அளவையூர் தத்துவஞானி கைலாசபதி அரங்கில் இடம்பெற்ற ஓய்வுநிலை அரசாங்க அதிபர் நாகலிங்கம் வேதநாயகனின் சேவை நயப்பு விழாவில் கலந்து கொண்டு வாழ்த்துரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ் மாவட்டத்தில் அரச அதிபராகக் கடமையாற்றி தற்போது ஓய்வு பெற்றுள்ள அளவெட்டி மண்ணின் மைந்தன் நா.வேதநாயகன் அவர்கள் ஒரு நேர்மையான அரச அதிகாரி. அந்த நேர்மையான அதிகாரியின் ஓய்வின் பின்னர் அவரது எதிர்காலம் தொடர்பில் பலராலும் பேசப்பட்டு வருகின்றது. அவர் அரசியலுக்குள் நுழையலாம் எனவும் பேசப்படுகிறது.

நேர்மையான அரச அதிகாரி அரசியல் பாதையில் சென்றால் அவரது நேர்மையை பாதிக்கும். எனவே அரசியல் பக்கம் செல்வதை தவிர்ப்பது நல்லது. மேலும் அளவையூர் மக்கள் சார்பில் ஒரு கோரிக்கையை முன்வைக்க விரும்புகின்றேன். அரசால் செய்ய முடியாத பல திட்டங்களை புலம்பெயர் மக்களின் உதவி யுடன் செய்ய முடியும். உதாரணமாக தமிழர் புனர்வாழ்வுக் கழகம் என்ற அமைப்பின் ஊடாக முன்னர் பல திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.



அதேபோல நாகலிங்கம் வேதநாயகன் தலைமையில் ஓர் அரச சார்பற்ற நிதியம் ஒன்றை உருவாக்குவதன் மூலம் வெளிநாடுகளில் இருந்து பல மில்லியன் ரூபா நிதி உதவிகளை பெற்று அரசால் செய்ய முடியாத பல திட்டங்களை எமது பிரதேசங்களில் முன்னெடுக்க முடியும்.

குறிப்பாக யுத்த காலத்தில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் என்ற அமைப்பின் ஊடாக புலம்பெயர் நாட்டில் இருந்து கிடைத்த நிதி மூலம் பல்வேறுபட்ட மக்கள் நலன் சார் அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.

அதேபோல் யுத்த காலத்தில் கிடைத்த நிதியை போல ஒரு 10 வீத நிதி கிடைத்தால் இங்கே பல அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்க முடியும்.

எனவே, எதிர்வரும் காலங்களில் நாகலிங்கம் வேதநாயகன் தலைமையில் ஓர் அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றைப் பதிவு செய்து அந்த நிதியத்தின் ஊடாக மக்களுக்குச் சேவையாற்ற சமூக ஆர்வலர்கள் முன்வர வேண்டும். இதேநேரம் பலரைப்போன்று கொழும்பில் பிளற்ஸ் வேண்ட வேண்டும் என்றோ, பிள்ளைகளுக்கு சொத்து சேர்க்க வேண்டும் என்றோ இல்லாத ஒருவர் வேதநாயகன் எனவும் தெரிவித்தார்.

## மாட்டு வண்டியில் நாம் பயணித்து பணியாற்றிய காலம் சுகமானதே!

### வேதநாயகனின் மணிவிழாவில் பழைய நினைவு மீட்ட இளங்கோ

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், நவ.15

இன்று பணியின்போது சகல வசதி, வாய்ப்புக்களும் இருந்த போதும் எந்த வசதியும் இன்றி மாட்டு வண்டியில் பயணித்த காலத்தில் பணியாற்றிய அன்று இருந்த மன நிறைவு இன்று கிடையாது என வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் தெரிவித்தார்.

அளவெட்டி பொ.கைலாசபதி அரங்கிலே முன்னாள் யாழ். மாவட்ட செயலாளராகப் பணியாற்றிய நா.வேதநாயகனின் பணி நயப்பு மலர் வெளியீட்டில் கலந்து கொண்டு பேசுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இங்கு தொடர்ந்து அவர் உரையாற்றுகையில் –

முகாமைத்துவ பயிற்சியை ஒன்றாக பெற்றமை முதல் அதுவும் ஒருவருட பயிற்சியை 3 மாதங்களாக சுருக்கி அனுப்பிய காலம். முதன் முதல் பணிக்காக நாம் ரயில் மூலம் வவுனியா வந்து அதற்கு இப்பால் மாட்டு வண்டியிலேதான் பயணித்து நிலமே இல்லாத இரு இடங்களுக்கு இருவரும் பதவியேற்றோம். அப்போது யாழ்ப்பாணம் மாவட்ட அரச அதிபராக மாணிக்கவாசர் பதவி வகித்த காலத்திலேயே நாம் பதவியேற்றோம்.

எம்முடன் தனுஜா மற்றும் ரூபினியும் எமது அணியை சேர்ந்தவர்கள். கொழும்பிற்கு செல்ல நாம் கிளாலியின் ஊடாகப் பயணித்தோம். அதன் பின்பு இடப்பெயர்வுகள், உயிர் அச்சுறுத்தல்கள் என பட்டியல் நீண்டது. எந்த வசதியும் வாய்ப்பும் கிடையாது. ஆனால் அன்று மன நிறைவு இருந்தது. வடக்கின் 5 மாவட்டத்தில் 4 மாவட்டங்களுக்கு அரச அதிபராகப் பணியாற்றிய வேதநாயக னுக்கு வந்த சோதனையின்போது குரூஸின் கூற்றே ஞாபகம் வந் தது. அதாவது பதவியின் போது கூடியிருந்த கூட்டம் பதவி போனால் தனித்து விடப்படுவோம் என்றார். அது இப்போதும் பொருந்துகின்றது. – என்றார்.

# போசாக்குக் குறைவுடன் வவுனியாவில் சிறுவர்கள்

வவுனியா, கண்ணன் கோட்டம் மற்றும் கருப்பனிச்சங்குளம் கிராமத்தில் 82 சிறுவர்கள் போசாக்கு மட்ட குறைவுடன் இனங்காணப்பட்டுள்ள நிலையில், 3 மாதத்துக்குள் அவர்களின் போசாக்கை அதிகரிக்க துரித நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

வவுனியா மாவட்ட சுகாதார திணைக்களமும், ரகமா நிறுவனமும் இணைந்து இந்தச் செயற்பாட்டை முன்னெடுத்துள்ளன. வவுனியா மாவட்ட சுகாதாரத் திணைக்களமும், ரகமா நிறுவனமும் இணைந்து 'சிறுவர்களுக்கான போசாக்கு மட்டத்ரா அதிகரித்தல்' என்னும் தொனிப்பொருளில் வவுனியா, கண்ணன் கோட்டம் மற்றும் கருப்பனிச்சங்குளம் ஆகிய கிராமங்களில் 12 வயதுக்கு உட்பட்ட சிறுவர்களின் போசாக்கு மட்டம் தொடர்பான ஆய்வு ஒன்றை முன்னெடுத்திருந்தன.

அதனடிப்படையில் போசாக்கு உணவு இன்மை, வறுமை மற்றும் வருமானத்துக்கு மேலதிகமான நாளாந்த குடும்பச் செலவு என்பன காரணமாக பல சிறுவர்கள் சீரான முறையில் போசாக்கு உணவைப் பெற முடியாத நிலையில் இருக்கின்றமை கண்டறியப்பட்டது. இவ்வாறு 82 சிறுவர்கள் போசாக்குக் குறைவுடன் இனங்காணப்பட்டனர்.

மேற்படி இனங்காணப்பட்ட சிறுவர்களின் ஊட்டச்சத்தின் அளவை 3 மாத காலப் பகுதிக்குள் அதிகரிக்கச் செய்யும் நோக்கில், சுகாதாரத் திணைக்களத்தின் வழிகாட்டலில் ரகமா நிறுவனதால் இனங்காணப்பட்ட சிறுவர்களுக்கு போசாக்கான உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன. இந்த நிகழ்வில் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், சுகாதார திணைக்கள உத்தியோகத்தர்கள், ரகமா நிறுவன உத்தியோகர்த்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# வேதநாயகனின் மணிவிழாக் காட்சிகள்












நேர்மை மிக்கவர் என அனைவராலும் புகழப்படும் மக்கள் சேவகன் முன்னாள் அரச அதிபர் நா.வேதநாயகனின் மணிவிழா அளவையூர் தத்துவஞானி கைலாசபதி அரங்கில் நடைபெற்றது. அதன் சில பதிவுகள்...........

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 15.11.2021 இல் வெளியிடப்பெற்றது.